மலர்-2 இதழ்-29 நவம்பர் 1-15 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

**உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்**



## பெண் வடிவில் விநாயகர்

## மனித வாழ்வு இவ்வளவுதான்...

# பிறப்பற்றநிலைக்கு கருடப்புராணம் கூறும் வழிமுறைகள்



பணம்.... பணம்.... பணம்.... இதை மட்டுமே வாழ்க்கை என்று மனிதர்கள் எண்ணுவதால், ஒடி... ஒடி.... உழைத்து, செய்யக்கூடாததையெல்லாம் செய்தாவது, பணத்தை சம்பாதிப்பதை மட்டுமே குறிக்கோளாக கொண்டு வாழ்க்கையை நடத்துகின்றனர்.

மனிதன் வாழப்போகும் வாழ்க்கைக்கும், தேவைக்கும், ஒரு சில பகுதிகளை மட்டும் பணத்திற்கு முக்கியத்துவம் தந்து, மற்ற பகுதிகளை, தான் பிறந்த நோக்கத்திற்கு செலவழிக்க வேண்டும் என்பதை மறந்துவிடுகின்றனர்.

ஒரு ஏக்கர் விவசாய நிலத்திற்கு தேவையான நீரை மட்டுமே கிணறுகளில் இருந்து இறைக்க வேண்டும். கிணற்றில் அதிகமாக நீர் இருக்கிறது என்பதற்காக மொத்த நீரையும் இறைத்து விவசாய நிலத்தில் ஊற்றினால், பயிர் அழுகிப்போய், விவசாய நிலமே சேரும் சகதியுமாக மாறிவிடும்.

தற்போது இதுபோன்ற நிலையில்தான் மனித வாழ்க்கையும் சென்றுகொண்டுள்ளது. மனிதர்கள் பணம் சம்பாதிக்கும் வழிமுறை தெரிந்ததும், பணத்தை சம்பாதிப்பதை மட்டுமே செய்து வருகின்றனர். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பதை மறந்துவிடுகின்றனர். பண ஆசை அதிகரித்தால், மண்ணாசையும், பெண்ணாசையும் தானாக அவனைத்தேடி வந்துவிடுகிறது.

இவ்வாறு ஆசைகள் அனைத்தும் ஒரு மனிதனை சங்கமிக்கும்போது, மனிதனுக்குள்ளிருக்கும், அன்பு, இன்பம், வாலிபம், மகிழ்ச்சி, சிரிப்பு, குடும்ப உறவுகள், நட்பு வட்டங்கள், ஆன்மிகம், தெய்வ சிந்தனை, போன்ற பலவற்றை இழந்து விடுகிறான்.

விவாசாய நிலத்திற்கு தேவையான தண்ணீரை ஊற்றி, பயிர்களுக்கு சரியான சத்துக்களை கொடுத்து, கெட்ட பூச்சி புழுக்களை கொன்று பராமரித்தால் அந்த விவாசய நிலத்தில் அதிகப்படியான மகசூல் கிடைக்கும்.

இதைப்போன்று மனித வாழ்க்கைக்கு தேவையானதைமட்டும் சம்பாதித்து, ஒழுக்க நெறியுடன் வாழ்ந்து, ஆசைகளை துறந்து, மற்றவருக்கு எவ்வித தீங்கும் விளைவிக்காமல், மற்றவர்களை மதித்து நடந்து வந்தால் மனித வாழ்க்கையும் மேன்மையடையும்.

கருடப்புராணத்தில் பறவைகளின் அரசனான கருடனுக்கு, மகாவிஷ்ணுவான ஸ்ரீ வாசுதேவர் வழங்கும் அறிவுரைகளையும், கருடனின் கேள்விகளுக்கு வாசுதேவர் அளிக்கும் பதிலையும் ஒன்றினைத்து உருவானதுதான் கருடப்புராணம்.

இந்தப் புராணத்தில் கூறப்படும் அனைத்து விஷயங்களும், மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் நடைபெறும் பல்வேறு காரண காரியங்களுக்கு மிகச் சிறந்த விடையாக உள்ளது.

அதன்படி மனிதப் பிறப்பிற்கான காரணத்தையும், மனிதர்கள் செய்யும் பாவங்களுக்கும், மனிதர்களே காரணமாக உள்ளனர் என்பதை மிக அழகாக கூறியுள்ளது கருடப்புராணம்.

தற்காலத்தில், அதிகாரபலம், பேராசை போன்றவற்றால் நடைபெறும் பல்வேறு நிகழ்விற்கு ஏற்படும் முடிவை மிக எளிதாக கருடப்புராணம் கூறியுள்ளது.

1. பெண்ணாசை, 2. பொன்னாசை, 3. மண் ஆசை, இந்த மூன்று ஆசையின் முடிவு, ஆசைப்படுபவனின் இறுதிமுடிவாகத்தான் இருக்கும் என்பதையும் மிகத் தெளிவாக கூறியுள்ளது.

அந்தவகையில் கருடன் மகாவிஷ்ணுவிடம் கேட்கும் ஒரு கேள்வி....

"உலகத்தில் ஜீவர்கள் ஏன்பிறக்கிறார் கள்? என்ன காரணத்தால் சுவர்க்க நரகங்களை அடைகிறார்கள்?. எந்தப் புண்ணியத்தைச் செய்தால், இன்ப வீடான தேவர்களின் உலகை அடைவார்கள். எத்தகைய கர்மங்களால் பாவங்கள் நிவர்த்தியாகும். இவற்றையெல்லாம் அடியேனுக்குத் தெளிவாகக் கூறியருள வேண்டும்" என்று கருடன் மகாவிஷ்ணு விடம் கேட்க....

இந்தக் கேள்விக்கு விடையாக மகாவிஷ்ணு அளித்த பதில்...

"நீ நல்லதொரு கேள்வியை நல்ல முறையில் கேட்டு விட்டாய். அது உலகினருக்குப் புரியாத ரகசியங்கள். அவற்றை நாம் கூறுவோம். கவனமாகக் கேள்...

எத்தனை நாட்கள் வாழ்ந்தாலும் என்றாவது இறப்பது நிச்சயம் என்பதை யாரும் நினைப்பதில்லை.

உயிர்களைக் கவர்ந்து செல்லும் கூற்றவன் (எமன்) யாரையும் விடமாட்டான் என்பது உண்மை.

இந்த உண்மையை உணர்ந்த மனிதன், இறப்பு நமக்கும் வரும் என்பதை அறிந்தாவது, பயந்



தாவது நல்ல செயல்களை இயற்றி அறநெறிப்படி வாழ்வான்.

அவன் தர்மங்களை, கடமைகளை ஒழுங்காகச் செய்து வருவானாகில், அவன் செய்யும் அந்த செயல்களே அவனைக் காப்பாற்றும். தனக்குரிய கடமைகளை ஒருவன் முறைப்படிச் செய்கிறானோ, அவன் மேன்மை அடைவான், பிறப்பற்ற நிலையை அவன் அடைவான்.

உலகில் எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்கள் உள்ளன. அவை அண்டகம், உற்பிசம், சராவுசம், சுவேதசம் என்று நான்கு வகையில் உள்ளன.

அண்டகம் என்ற வகையில் முட்டையிலிருந்து இருபத்தோரு லட்சம் பறவைகள் தோன்றின.

உற்பிச வகையில் இருபத்தோரு லட்சம் மரஞ், செடி, கொடி, தாவர வகைகள் தோன்றின.

கருப்பப் பையிலிருந்து தோன்றுவதான சிராயுசம் வகையில் இருபத்தோரு லட்சம் மனிதர்கள் தோன்றினர்.

வேர்வையிலிருந்து தோன்றுவதான சுவேதசம் வகையில் இருபத்தோரு லட்சம் கொசு முதலியவைகளும் தோன்றியுள்ளன.

பிறவிகள் அனைத்திலும் மானுடப் பிறவி அரிதினும் அரிது. மனிதப் பிறவியே புண்ணியப் பிறவியாகும். எல்லா விதத்திலும் மானிடப் பிறவியே சிறப்புடையது.

புண்ணியத்தால் அடைந்த மானுடப் பிறவியால் பாக்கியம் அடையாதவர்கள், தமக்குத் தானே வஞ்சனை செய்து கொள்பவர்களாவார்கள்.

மண், பொருள், ஆசை, எனப்படும் இம்மூன்று ஆசைகளால், மயக்க முற்று செய்யத் தகாதவற்றைச் செய்து தன் மனசாட்சிக்கும், மனிதாபிமான உணர்வுக்கும், மாறுபாடான தீயச் செயல்களைச் செய்து, தர்மங்களை அறியாமல் உழல்பவன் எவனோ, அவன் மிருகங்களுக்கு ஒப்பாவான்.

இதனால் அறிவுணர்வும், அன்புணர்வும், அறநெறி வாழ்வும் வளராது. அளவில்லாமல் ஆசைகள் வளர்ந்து கொண்டேயிருக்கும்.



ஆசையே அழிவுக்குக் காரணம் என்று போதிக்கும் மகான்களோ, யாவராலும் போற்றப் பட்டு, நம் இறுதி நாளான அந்திம காலத்தில் சுவர்க்க லோகத்தை அடைவார்கள்.

ஆசைக்கு அடிமையானவர்கள் வயோதிகப் பருவம் வந்ததும், தன் புத்திரர், பௌத்திரர்கள் துணித்து கிழப் பிணமே! வாய் திறவாமலே வெறுமனே விழுந்து கிட! என்று இழித்தும், பழித்தும், அதட்டியும் பேசும் ஏச்சு மொழியைக் கேட்டு, மனம்பொறுமிக் கிடப்பான்.

ஆகையால் கல்வியும், வித்தையும் கற்றுணர்ந்தவனேயானாலும் ஞானம் (மெய்யறிவு) இல்லாவிட்டால் பொண்ணுக்கு அடிமையாகி கிடப்பான்.

கருடா! இந்திரிய உணர்வினாலேயே ஒவ்வோர் ஜீவராசிகள் நாசம் அடையும் போது பஞ்ச இந்திரிய இச்சைகளையுடைய மனிதன் அடையக் கூடிய கேடுகள் கொஞ்சமாகயிராது என்பதில் சந்தேகமில்லை.

இல்லற வாழ்வின் சுகதுக்கங்களில் எது அதிகமாயினும் பெண்டுபிள்ளைகள் அதிகமாகிப் பந்தபாசத்தால் கட்டுண்ட மனிதன் நிம்மதியடைய மாட்டான்.

உலகில் மனிதன் பிறந்து பிறந்தே இறக்கிறான். ஆசைகளால் நோயுற்று மாண்டு விடுகின்றான். ஒருவரும் தனக்கு துணையில்லாமல் ஒருவனாகவே யாருக்கும் சொல்லாமல் மடிந்து போகிறான்.

பொய்யான பத்திரங்கள் எழுதி பொய் சொல்லி, ஏமாற்றி, வழிப்பறி, கொலை புரிந்து, தீயச் செயல்களைச் செய்து, தான் சேர்த்த பொருள்களை, உரியவருக்கு அளித்து, பழி பாவங்களோடு போகிறான். அவன் மனைவி மக்கள் பாவங்களில் பங்கு ஏற்றுக் கொள்வாரில்லை. முக்திக்குச் சாதனமான, தவம், தருமம், தானம் செய்து, பிரபக்தி மார்க்கம் எனப்படும் தேவ சேவைகளை செய்வதே உத்தமமாகும்.” இவ்வாறு கருடனின் கேள்விக்கு ஸ்ரீ நாராயணர் மிக தெளிவாக விடையாக கூறியுள்ளார்.





# ராகுகால பூஜைசெய்ய உகந்த கிழமைகளும் பயன்படுத்தும் மலர்களின் பலன்களும்

எந்த ஒரு நல்ல காரியம் செய்யும் போதும் ராகுகாலம், எமகண்டம் போன்றவற்றை பார்த்து பார்த்து செய்வது வழக்கம்.

இவ்வாறு நாம் பார்க்கும் கால நேரங்கள் நமது ராசி, அதிர்ஷ்டம் போன்றவற்றுடன் சேர்ந்து பல்வேறு வெற்றி கிடைக்க வழிவகை செய்யும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அந்தவகையில் ராகுகாலத்தில் பொதுவாக எந்த காரியத்தையும் செய்வதில்லை.

ஆனால் அந்த நேரத்தில் இறை நம்பிக்கையுடன் ராகுகால பூஜை செய்யும்போது கிரக மற்றும் கெடுதல் சக்திகளிலிருந்து விடுபடலாம் என்று முன்னோர்கள் வகுத்த பூஜைதான் ராகுகால பூஜையாகும்.



ராகு கால பூஜை என்பது என்ன, அதனால் ஏற்படும் நன்மைகள் என்ன என்று அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

நாம் நமது இல்லங்களில் அன்றாடம் பூஜை மேற்கொள்கிறோம், இது தவிர கோவில்களுக்கு சென்று வழிபடுகிறோம். ராகு கால நேரம் என்பது வாரத்தில் அனைத்து நாட்களிலும் உண்டு.

செவ்வாய் கிழமை மற்றும் வியாழக் கிழமைகளில் செய்யப்படும் ராகு கால பூஜை மிகவும் சிறப்பானது.

இதைத்தவிர மற்ற நாட்களிலும் ராகு கால பூஜை செய்யலாம். ஒவ்வொரு கிழமைகளில் ஒவ்வொரு விதமான மலர்களைக் கொண்டு பூஜை செய்வது வாழ்வில் நிம்மதியும் வளங்களும் பெருகும்.

சூரிய கிரகத்துக்கு ஞாயிற்று கிழமைகளில் பாரிஜாதம் மற்றும் வில்வ மலர்களைக் கொண்டு பூஜை

சந்திர கிரகத்துக்கு திங்கள் கிழமைகளில் வெள்ளை அலரி மலர் கொண்டு பூஜை

செவ்வாய் கிரகத்துக்கு செவ்வாய் கிழமைகளில் செவ்வரளி, செந்தாமரை மற்றும் செம்பருதி மலர் கொண்டு ராகு கால பூஜை செய்வது செவ்வாய் தோஷம் விலகும்.

புதன் கிரகத்துக்கு புதன் கிழமைகளில் துளசி கொண்டு பூஜிக்கலாம்.

வியாழக் கிழமைகளில் குரு கிரகத்துக்கு மஞ்சள் நிற மலர்கள் மற்றும் சாமந்தி மலர் கொண்டு பூஜை செய்யவேண்டும்.

சுக்கிரனுக்கு வெள்ளிக் கிழமைகளில் வெள்ளை அரளி கொண்டு பூஜை செய்யலாம்.

சனி பகவானுக்கு சனிக் கிழமைகளில் நீல நிற சங்கு மலர் கொண்டு அர்ச்சிக்க வேண்டும்.

மேற் கண்ட ஒவ்வொரு தினத்திலும் குறிப்பிட்ட மலர்களைக் கொண்டு பூஜை செய்தால் இல்லத்தில் அமைதி மற்றும் சுபிட்சம் பெருகும்.



# நந்தி காதில் பேசலாமா?

நந்தியின் காதில் நம்முடைய கோரிக்கைகளை சொல்வது தவறானது.! பிரதோஷ நேரங்களில் நந்தியின் காதில் நம்முடைய கோரிக்கைகளை சொல்வது மிகவும் தவறானது. ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிலைகளைத் தொடுதல் என்பது முற்றிலும் தவறான ஒன்று. அஷ்டபந்தனம் சாற்றப்பட்டுள்ள சிலைகளை அர்ச்சகரைத் தவிர மற்ற எவரும் தொடக்கூடாது. எக்காரணத்தைக் கொண்டும் இறைவனுக்கும், நந்திக்கும் இடையே இறைவனை மறைக்கும் விதமாகச்சென்று நிற்கக்கூடாது. உங்களது வேண்டுகோளையும், பிரார்த்தனைகளையும் நேரடியாக இறைவனிடமே முறையிடலாம். அதனை விடுத்து இறைவனை நோக்கித் தியானத்தில் அமர்ந்திருக்கும் நந்தியினைத் தொந்தரவு செய்யும் விதமாக அவரைத் தொடுவதும், அவரது காதுகளில் ரகசியமான முறையில் வேண்டுகோளைச் சொல்கி றேன் என்று நம் எச்சில் படும் விதமாக குறைகளைச் சொல்வதும் முற்றிலும் தவறான ஒன்று.

## திடீர் அவதாரம்

விஷ்ணு பகவான் எடுத்த அவதாரங்களில் நரசிம்ம அவதாரம் திடீரென எடுக்கப்பட்ட அவதாரமாகும். பெருமாளின் அவதாரங்களில் இது 4வது அவதாரமாகும். தீமையை அழித்து அறத்தைக் காக்க திருமால் எடுத்த வடிவங்களே அவதாரங்கள்.

அந்த வகையில் மனித உடலுடனும் சிங்க முகத்துடனும் மகாவிஷ்ணு எடுத்த அவதாரம் தான் நரசிம்ம அவதாரம். மற்ற அவதாரங்கள் ஒரு குறிக்கோளுடன் திட்டமிடப்பட்டு, பிறந்து, வளர்ந்து தக்க தருணத்தில் தீமையை அழிக்க எடுக்கப்பட்ட அவதாரங்களாகும். ஆனால் நரசிம்ம அவதாரமோ ஒரு நொடியில் தோன்றி அசுரவதம் செய்து பக்தனைக் காத்த அவதாரமாகும்.

எனவே இந்த அவதாரத்திற்கு தீமைகளை அழிக்கும் சக்தி அதிகம். உள்ளும் புறமும் உள்ள தீமைகள் அழிய வேண்டுமானால் நரசிம்ம அவதாரத்தை வழிபட்டால்



## கோரிக்கை வைத்தவுடன் நிறைவேற்றும் அவதாரம்

பகவான் விஷ்ணு எடுத்த தசாவதாரங்களில் மிக உயர்ந்தது நரசிம்ம அவதாரமாகும். ஏனெனில், ஒரு பக்தனின் சொல்லைக் காப்பாற்றவே, விஷ்ணு இந்த அவதாரத்தை நிகழ்த்தினார். மனிதனுக்கு வாக்கு சுத்தம் மிக முக்கியம். ஒன்றைச் சொன்னால், அதைச் செய்தாக வேண்டும். வாக்கு தவறினால் அவனுக்கு மதிப்பு போய்விடும்.

இதன் அடிப்படையில்தான், பிரகலாதனின் வார்த்தையை காப்பாற்ற தூணை உடைத்துக் கொண்டு வெளிப்பட்டார் நரசிம்மன். வைகாசி மாதம் வளர்பிறை சதுர்த்தியன்று சூரியன் மறையும் நொடியில், (பகலுமின்றி, இரவுமின்றி) மாலை அந்திப்பொழுதில் நரசிம்மர் அவதரித்தார்.

சுவாதி நட்சத்திரத்தன்று அவரை வழிபடுவது நல்ல பலனை தரும். நாளை என்பது நரசிம்மனுக்கு இல்லை. அவரிடம் வைக்கும் கோரிக்கை உடனுக்குடன் நிறைவேறும் என்பது ஐதீகம்.





வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில் இந்து சமயக் கருத்துக்களையும், பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

# ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 310601011001269**
**IFSC CODE:VIJB0003106**
**MICR CODE: 600029043**
**VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)**

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
7299992699 / 8825844033



# குலதெய்வம் தெரியாதவர்கள், நோய்நொடிகளினால் அவதிப்படுபவர்களை காக்கும் ரத்தினகிரீஸ்வரர்

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அற்புதமான வரலாற்றை பின்புலமாக கொண்டவை, அந்தவகையில் ரத்தினகிரிஸ்வரர் ஆலயம் பல்வேறு சிறப்புகளை கொண்டதாக விளங்குகிறது.

இயற்கை எழில் சூழ்ந்த காட்சியுடன் விளங்கும் இம்மலை மேருமலையின் ஒரு சிகரம். சோதிலிங்க வடிவமானது. மலைக்கொழுந்தீஸ்வரராக எழுந்தருளியுள்ள பெருமான் சுயம்பு மூர்த்தி. காலையில் காவிரிக் கரையிலுள்ள கடம்பர் கோயிலில் வழிபாடு செய்துவிட்டு நடுப்பகலில் ரத்தினகிரீஸ்வரரை வணங்கி மாலையில் திருஈங்கோய் மலைநாதரை வழிபட்டால் நல்ல புண்ணியமுண்டு என்பது ஐதீகம்.

மணி முடி இழந்த ஆரிய மன்னன் ஒருவன் இத்தலத்திலுள்ள இறைவனுக்கு அபிசேக ஆராதனைகள் செய்கின்ற போது அங்குள்ள கொப்பரையில் காவேரி தீர்த்தம் ஊற்றி நிரப்பப்பட்டது. ஆனால் தீர்த்தம் ஊற்ற ஊற்ற கொப்பரை நிரம்பவே இல்லை.

ஊர் மக்கள் அனைவரும் ஊற்றியும் நிரம்பாததால் மன்னன் கோபம் கொண்டு தன் வாளை உருவி சுவாமி மீது வீசினான். இதனால் சுயம்புவில் இருந்து ரத்தம் வந்தது. இதையடுத்து மன்னன் தன் தவறை உணர்ந்து இறைவனை வணங்கினான். இதையடுத்து இறைவன் தோன்றி மன்னனுக்கு அருளாசி வழங்கி இரத்தினங்களை வழங்கினார். அந்த தழும்பு இன்னும் சுவாமியின் முடியில் உள்ளது,

தங்கள் குல தெய்வம் தெரியாதவர்கள் ரத்தினகிரீஸ்வரரை தங்கள் குலதெய்வமாக வழிபடலாம். தவிர இங்கு இறைவனை வழிபட்டால் கல்யாண வரம், தொழில் விருத்தி, புத்திர பாக்கியம் ஆகியவை நிறைவேறுகின்றன. இத்தலத்து ரத்தினகிரீஸ்வரரை வணங்கினால் மன அமைதி கிடைக்கும். நிம்மதி வேண்டுவோர் நிறைய பேர் இம்மலைக்கு வருகிறார்கள். தவிர இம்மலையில் படிகள் வழியே மலை ஏறும் போது ஏராளமான மூலிகை மரங்கள் இருபுறமும் உள்ளன.

இத்தகைய அபூர்வமான மூலிகை காற்றை சுவாசிப்பதால் உடலில் உள்ள ஆஸ்துமா, ரத்த கொதிப்பு,நெஞ்சுவலி, கை கால் மூட்டு வலி, இரத்த அழுத்தம் ஆகியவை உள்ளவர்கள் ஒருமுறை மலை ஏறிவிட்டு வந்தாலே அதிசயமான மாற்றத்தை அடைவதை முழுமையாக உணர முடியும். இந்த பிரச்சினைகள் உள்ளவர்கள் அடிக்கடி வந்து வழிபட்டால் கூடிய விரைவில் குணமடைவது கண்கூடாக நடந்து வரும் அதிசயமான உண்மை.

இக்கோயில் அப்பர் பாடல் பெற்ற சிவாலயமாகும். இது அகத்தியர் இறைவனை நண்பகலில் தரிசித்த தலமென்பதால் இவ்விறைவன் மத்தியான சுந்தரர் என்றும் வழங்குகிறார் என்பது ஐதிகம். இத்தலம் தற்போது மக்கள் வழக்கில் ஐயர்மலை என்று வழங்கப்படுகிறது. தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகும். காவிரி தென்கரைத் தலங்களில் முதலாவது சிவத்தலமாகும். மேலும் இது ரத்தினாவளி சக்தி பீடமாகவும் விளங்குகிறது.

“கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனார்
ஆல நீழ லமர்ந்தவாட் போக்கியார் .
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே. .

இறைவன் நவரத்தினங்களாக இருப்பதால் இம்மலையை சுற்றி அமைந்த சுற்று வட்டாரப்பகுதிகளில் பூமிக்கடியில் பச்சை கற்கள், சிவப்பு கற்கள் ஆகியவை நிறைய கிடைக்கின்றன. சுற்றிலும் 8 பாறைகளுக்கு நடுவே உள்ள ஒன்பதாவது பாறையில் சிவபெருமான் சுயம்புவாக எழுந்தருளியுள்ளார். 1117 படிகள் கொண்ட மலை மீது அமைந்துள்ள மிகவும் சிறப்பு வாய்ந்த சிவதலம். சித்திரை மாதங்களில் சூரிய கிரணங்கள் சுவாமி சன்னதிக்கு நேரேயுள்ள நவத்துவாரங்களின் வழியே சிவலிங்கத்தின் மீது விழுகின்றன.

இம்மலையில் உள்ள பாம்புகள் தீண்டினால் விஷம் ஏறுவதில்லை. மணிமுடி இழந்து தேடி வந்த ஆரிய மன்னனுக்கு இரத்தினமும், சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு பொற்கிழியும் இறைவன் கொடுத்ததும் இத்தலத்தில்தான்

சுவாமிக்கு பால் அபிசேகம் செய்த பச்சை பால் மாலை வரை கெடாது. பத்தி, கற்பூரம் ஆகியவை பாலில் விழுந்த போதிலும் கெடுவதில்லை. அபிஷேகம் செய்த பால் சிறிது நேரத்தில் கெட்டியான சுவை மிகுந்த தயிராக மாறி விடுகிறது. இது இக்கோயிலின் இன்று வரை நடக்கும் அதிசயமான ஒன்றாகும்.

திருக்கோயில் தொலைபேசி எண்: 04323 245522.





# மரணத்தைப் புரிந்துகொள்ளுதல்

இயற்கையான மரணத்திற்கு அச்சம்கொள்ள வேண்டாம். இயற்கையான மரணம் ஓர் அருளாசியாகும். 'மரணம்' என்றால் சாதாரண மனிதர்கள் பயப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். மரணத்தைப்பற்றி இறந்துவிட்ட சாதாரண மனிதர்கள் வந்து கூறமுடியாது. இறைவனுடன் இணைந்த மகான்களாலும் யோகிகளாலும் மட்டும்தான் மரணத்தைப்பற்றி கூறமுடியும். அதைப்பற்றி குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் "மரணத்தைப் புரிந்துகொள்ளுதலை" பற்றி கூறுகிறார்:

"சாதாரண மனிதன் மரணத்தை அச்சத்துடனும் கவலையுடனும் நோக்கினாலும் முன்பே அங்கு சென்றிருப்பவர்கள் அதனை அமைதி மற்றும் விடுதலையின் ஓர் அற்புதமான அனுபவமாக அறிகின்றனர். மரணமடைந்த நம் அன்பர்கள் எங்கே இருக்கின்றனர்? யாராவது இறந்துகொண்டிருக்கும்பொழுது அவரால் பேச முடியாவிட்டாலும் அவரது உணர்வு நிலையில் ஒரு விருப்பம் வெளிப்படுத்தப்படுகிறது. அவர் சிந்திக்கிறார்; நான் எனது அன்புக்குரியவர்களை விட்டுப்பிரிகின்றேன். மறுபடியும் நான் அவர்களை எப்பொழுதாவது காண்பேனா? என்றும், எவர்களை விட்டு மரணத்தின் வாயில்களுக்குச் சென்றிருக்கின்றனரோ அவர்களும் எண்ணுகின்றனர்; "நான் அவர்களை இழந்து கொண்டிருக்கிறேன். என்னை அவர் ஞாபகம் வைத்துக் கொள்வாரா? நாங்கள் மறுபடியும் சந்திப்போமா?" "இந்த வாழ்க்கையில் என் அன்னையை நான் இழந்தபோது, நான் யாரிடமும் ஒருபோதும் பற்றுவைக்கமாட்டேன் என்று எனக்குள் நான் சத்தியம் செய்தேன்."

மேலும் அவர் கூறுகிறார்: "மரணத்தறுவாயில் ஸ்தூல உடலின் அனைத்து வரம்புகளையும் மறந்து எவ்வளவு சுதந்திரமானவர் என்பதை நீங்கள் உணர்வீர்கள். முதல் சில நொடிகளுக்கு ஓர் அச்ச உணர்வு தெரியாததைக் குறித்த, உணர்வுநிலைக்கு பழக்கப்படாத ஏதோ ஒன்றைக்குறித்த அச்சம் அங்கே இருக்கிறது. ஆனால் அதன்பிறகு ஒரு பெரிய அனுபவஞானம் கிடைக்கிறது. ஆன்மா நிம்மதி மற்றும் சுதந்திரத்தின் ஆனந்தமயமான உணர்வை அனுபவிக்கிறது. அழியக்கூடிய உடலிலிருந்து வேறாக இருப்பதை நீங்கள் அறிகிறீர்கள்."

"ஒவ்வொருவரும் ஒருநாள் இறக்கவே போகின்றோம். அதனால் மரணத்தைப்பற்றி பயப்படுவதில் ஒரு பயனுமில்லை. உறக்கத்தில் உங்கள் தேக உணர்வை இழக்கப்போவதை எதிர்பார்த்து நீங்கள் வருத்தமடைவதில்லை; உறக்கத்தை ஆவலுடன் எதிர்நோக்கும் ஒரு விடுதலை நிலையாக நீங் கள் ஏற்றுக்கொள்கிறீர்கள். அதேபோல் தான் மரணமும். அது ஓர் ஓய்வுநிலை. இவ்வாழ்க்கையிலிருந்து கிடைக்கும் ஓர் ஓய்வூதியம். பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. மரணம் வரும்போது அதைப்பார்த்து சிரியுங்கள். மரணம் என்றும் வெறும் ஓர் அனுபவத்தின் மூலம் நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டிய ஒரு பெரும் படிப்பினை; நீங்கள் இறக்க முடியாது. நமது உண்மையான "நான்" அதாவது ஆன்மா, அழிவற்றது. மரணம் என்றழைக்கப்படுகிற அந்த மாற்றத்தில் நாம் ஒரு சிறிது நேரம் உறங்கலாம், ஆனால் நாம் என்றுமே அழிக்கப்பட முடியாதவர்கள். நாம் இருக்கின்றோம். மேலும் அந்த இருப்பு சாசுவதமானது. அலையாவது கரைக்கு வருகிறது. மறுபடியும் கடலுக்குத் திரும்பிச்சென்றுவிடுகிறது. அது தொலைந்துவிடுவதில்லை. அது கடலுடன் ஒன்றாகிவிடுகிறது. அல்லது மற்றொரு அலையின் வடிவத்தில் மீண்டும் திரும்புகிறது. இந்த உடல் வந்திருக்கிறது. மேலும் இது மறைந்துவிடும். ஆனால் இதனுள் உள்ள ஆன்மசாரம் என்றும் மடிவதில்லை. அந்த நிரந்தர உணர்வுநிலையை எதனாலும் முடித்துவிட இயலாது."



"உடல் ஓர் ஆடை மட்டுமே. இந்த வாழ்க்கையில் எத்தனை முறை உங்களது ஆடையை நீங்கள் மாற்றியிருக்கிறீர்கள், ஆயினும் இதனால் நீங்கள் மாறிவிட்டதாகக் கூறமாட்டீர்கள். அதைப்போல், மரணத்தில் இந்த உடலாகிய ஆடையை நீங்கள் விட்டு விடுகிறபொழுது நீங்கள் மாற்றமடைவதில்லை. அவ்வாறாகவே, நீங்கள் ஓர் அழியாத ஆன்மாவாக, இறைவனது ஒரு குழந்தையாக இருக்கிறீர்கள்."

"மரணம்" என்பது ஒரு மாபெரும் தவறான சொல். ஏனெனில் மரணம் என்பதே இல்லை; வாழ்வில் களைப்புற்றதும் நீங்கள் சதையாகிய மேல் அங்கியை வெறுமனே அகற்றிவிட்டு சூட்சும உலகத்திற்கு (சுவர்க்கம், உயர்ந்த சக்திகள் மற்றும் உணர்வுநிலையை உடைய நுட்பமான பிரதேசம்) திரும்புகிறீர்கள். ஆன்மாவின் அழிவற்ற தன்மை குறித்து பகவத்கீதை அழகாகவும் ஆறுதலாகவும் கூறுகிறது."

"ஒருபோதும் ஆன்மா பிறப்பதில்லை; ஆன்மா இறப்பதும் ஒருபோதும் இல்லை. ஒருபோதுமில்லை அது இல்லாதிருந்த காலம், முடிவும் ஆரம்பமும் கனவுகளே! பிறப்பற்று, இறப்பற்று, மாறுதலற்று உள்ளது ஆன்மா என்றென்றும்; மரணம் அதனை தொட்டதே இல்லை, ஆயினும் அதன் உடற்கூடு மரணம் எய்தியதாய் தோன்றும். மரணம் என்பது முடிவல்ல. அது கர்மவினை எனும் நீதியின் சட்டமானது. மரணம் என்பது சரீரத்தில் வலி மிகுந்த சித்திரவதைகளிலிருந்து மீட்சிபெற்று விழிப்புடன்கூடிய சாந்தம் மற்றும் அமைதிக்குள் செல்வதாகும். வயதானவர்களுக்கு இது வாழ்க்கை நெடுகிலுமான வருடக்கணக்கான போரட்டங்களின் மூலம் ஈட்டப்பட்ட ஓர் ஓய்வூதியமாகும். அனைவருக்கும் இது வரவேற்கத்தக்க ஓர் ஓய்வாகும்."

குருதேவர் மேலும் கூறுகிறார்: "இறந்துகொண்டிருக்கும் மனிதனின் உணர்வுநிலை உடல் பாரத்தினின்றும், மூச்சுவிட வேண்டிய தேவையினின்றும் மற்றும் எந்த ஒரு வலியிலி ருந்தும் திடீரென்று விடுவிக்கப்பட்டதாக தன்னை காண்கிறது. மிகவும் அமைதியான, தெளிவற்ற மங்கலான ஒளியுடைய ஒரு சுரங்கப்பாதையின் வழியே மேலெழும்பிச் செல்கின்ற ஓர் உணர்வு ஆன்மாவால் அனுபவிக் கப்படுகிறது. பின்னர் ஸ்தூல உடலில் அனுபவித்த மிகமிக ஆழ்ந்த உறக்கத்தைவிட லட்சம் மடங்கு அதிகமாக ஆழ்ந்தும், மிகவும் மகிழ்ந்து அனுபவிக்கத்தக்கவாறும் உள்ள உணர்வில்லாத ஓர் ஆழ் உறக்க நிலைக்கு ஆன்மா மிதந்து செல்கிறது. மரணத்திற்குப் பின் உள்ள நிலையானது பூவுலகின் பல்வேறான மனிதர்களுடைய வாழ்வின் போக்குகளுக்கு ஏற்ப அவர்களால் வெவ்வேறு விதமாக அனுபவிக்கப்படுகின்றது.

பல்வகைப்பட்ட மனிதர்கள் தங்களது உறக்கத்தின் கால அளவிலும் ஆழத்திலும் வேறுபடுவதுபோல அவர்களது மரணத்திற்குப் பின் உள்ள அனுபவங்களிலும் அவர்கள் வேறுபடுகின்றனர். வாழ்க்கைத்தொழிற்சாலையில் கடினமாக உழைக்கின்ற நல்ல மனிதர் ஒரு சிறிது காலத்திற்கு ஓர் ஆழ்ந்த, தன்னை மறந்த, ஓய்வு நிறைந்த உறக்கத்திற்குச் செல்கின்றனர். பின்பு அவர் சூட்சும உலகத்தில் ஏதோவொரு உயிர்பகுதியில் விழித்தெழுகிறார்: "எனது தந்தையின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உள்ளன."

"என்னால் சுவர்க்கத்தைப் பற்றிய நம்பிக்கையை கொள்ள இயலவில்லை" என்று ஒரு புதிய மாணவன் குறிப்பிட்டான். உண்மையிலேயே அப்படி ஓர் இடம் இருக்கிறதா?" "ஆமாம்" பரமஹம்ஸ யோகானந்தர் பதிலளித்தார். "எவர் இறைவனிடம் அன்பு செலுத்துகிறார்களோ, தங்களுடைய நம்பிக்கையை அவனிடம் வைக்கிறார்களோ அவர்கள் இறக்கும்போது அங்கு செல்கிறார்கள். அந்த சூட்சும தளத்தில், ஒருவர் வெறும் எண்ணத்தின் மூலமாகவே எதை வேண்டுமானாலும் உடனடியாக உருவாக்கும் திறனைப் பெற்றிருப்பார். சூட்சும உடல் மின்னும் ஒளியால் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிரதேசங்களில் பூவுலகம் எதுவுமே அறிந்திராத வண்ணங்களும் ஒலிகளும் உள்ளன. அது ஓர் அழகான மற்றும் அனுபவிக்கக்கூடிய உலகம்."

"சூட்சும உலகில் ஆன்மாக்கள் மிக வும் மெல்லியதான ஒளியாலான ஆடை அணிந்திருக்கும். அவை சதைத்தோலுடன்கூடிய எலும்புகளின் கட்டுகளுக்குள் தம்மை அடைத்துக்கொள்வதில்லை. மற்ற கரடுமுரடான திடப்பொருட்களுடன்மோதி உடைக்கக்கூடிய உறுதியற்ற கனத்த உடற்கூடுகளை அவை சுமப்பதில்லை. எனவே சூட்சும உலகில் மனித உடலுக்கும்

**21 பாகம்**

**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**

மற்றும் திடப்பொருட்கள், சமுத்திரங்கள், மின்னல் மற்றும் நோய்க்கும் இடையே யுத்தம் இல்லை. பகைமை உணர்வுக்குப்பதிலாக அனைத்துப் பொருட்களும் பரஸ்பர உதவும் தன்மையுடன் உடனொத்து வாழ்வதால், அங்கே விபத்துகளும் இல்லை. அதிர்வலையின் எல்லா வகைகளும் ஒன்றோடொன்று இணக்கமாக பணிபுரிகின்றன. அனைத்து சக்திகளும் அமைதியாகவும் உணர்வு பூர்வமாக உதவுதலுடனும் வாழ்கின்றன. ஆன்மாக்கள் அவை நடந்து செல்கின்ற கதிர்கள் மற்றும் பருகி உண்ணும் ஆரஞ்சுக் கதிர்கள் ஆகிய அனைத்தும் உயிருள்ள ஒளியால் உருவாக்கப்பட்டுள்ளன. ஆன்மாக்கள் பிராண வாயுவை அல்லாமல், பரம்பொருளின் ஆனந்தத்தை சுவாசித்து, பரஸ்பர கவனிப்பு மற்றும் கூட்டுறவில் வாழ்கின்றன. சூட்சும உலகத்தில் மற்ற பிறவிகளில் நண்பர்களாக இருந்தவர்கள் ஒருவரையொருவர் சுலபமாகக் கண்டுகொள்கின்றனர்."

## தெய்வீக உண்மையை மனதில் இடையறாமல் பதியவையுங்கள்

பரமஹம்ஸர் கூறுகிறார்:

"உடல் நலமின்மை, முதுமை, மரணம் ஆகிய மனித குறைபாடுகளைப்பற்றிய எந்தக் கருத்தையும் மனதிற்குக் கூறுவதைத் தவிர்க்கவும். அதற்குப் பதிலாக இந்த உண்மையை மனதில் இடையறாமல் பதியச்செய்யவும்."

"நான் இந்த உடலாக மாறியுள்ள எல்லையற்றவன். பரம்பொருளின் ஒரு வெளிப்பாடான இந்த உடல் என்றும் பரிபூர்ணமான, என்றும் இளமையான பரம்பொருள்."

"பலவீனம் மற்றும் முதுமையாகிய எண்ணங்களினால் கட்டுப்படுவதற்கு மறுத்துவிடவும். நீங்கள் முதியவர் என யார் கூறினார்? நீங்கள் முதியவர் அல்ல. ஆன்மாவான நீங்கள் நிரந்தரமாக இளமையானவர். அந்த எண்ணத்தை உங்கள் உணர்வுநிலையில் பதியவைக்கவும்."

"நான் ஆத்மா, என்றும் இளமையான பரம்பொருளின் ஒரு பிரதிபலிப்பு. நான் வெற்றி கொள்வதற்காக இளமையுடனும் பேராவலுடனும் ஆற்றலுடனும் துடிப்புள்ளவன்."

நாம் எப்பொழுதும் சரியானவற்றை மட்டும் தான் செய்யவேண்டும்; பிறருக்கு எந்த வகையிலும் துன்பத்தை விளைவிக்கக்கூடாது.

## எது சரியோ அதன்பக்கம் நிற்கவும்

பரமஹம்ஸர் கூறுகிறார்: "நாம் சிறிதுகாலம் பூமியில் இருக்கின்றோம். அதன்பின் நாம் சென்றுவிடுகின்றோம். எதனுடனும் பந்தப்பட்டோ அல்லது கட்டுண்டோ இருக்கவேண்டாம். என்னை இந்த நாட்டின் குடிமகனாக இருக்க என்னிடம் கேட்டபோது நான் மறுத்தேன். ஏனெனில் நான் எந்த ஒரு நாட்டினுடைய குடிமகன் என்று அழைக்கப்பட நான் விரும்பவில்லை. அனைத்து தேசங்களும் என் நாடு. நான் உலகக் குடிமகன். என் தந்தை இறைவன்தான். அனைத்து மனித இனமும் என் குடும்பம். யார் அதை மறுக்க முடியும்? நான் நீதிக்காக போராடுவேன். அமெரிக்கா சரியாக இருக்கிறாள் என்றால் நான் அவளை ஆதரிப்பேன்; அவள் தவறாக இருக்கின்றபோது நான் அவளுக்காகப் போராடமாட்டேன். இந்தியா சரியாக இருக்கிறாள் என்றால் நான் அவளை ஆதரிப்பேன். ஆனால் அவள் தவறாக இருக்கிறாள் என்றால் நான் அவளை ஆதரிக்கமாட்டேன். எங்கெல்லாம் உங்கள் நாடு நியாயமாக இருக்கின்றதோ அதற்கு ஆதரவு அளியுங்கள். எங்கெல்லாம் உங்கள் குடும்பம் நியாயமாக இருக்கின்றதோ அவர்கள் பக்கம் இருங்கள். எங்கெல்லாம் உங்கள் நண்பர்கள் நியாயமாக இருக்கின்றார்களோ அவர்களுடன் ஒத்துழையுங்கள். இந்தக் கொள்கையின் உண்மையை உங்களால் மறுக்கமுடியாது." அதற்கான ஒரு சிறிய கதையை கூறுகிறார் குருதேவர்.

"மிகப்பழமையான மற்றும் பாரபட்சமான ஒரு நீதிபதி இருந்தார். ஒரு கிராமவாசி அவர் முன் அழைத்துவரப்பட்டான். அந்த நீதிபதி என்ன குற்றச்சாட்டு என்று கேட்டார். அவர், "கனம் நீதிபதி அவர்களே, உங்கள் எருது என் எருதுடன் சண்டையிட்டு, என் எருதினுடைய கொம்புகளை உடைத்தது. அதனால் அது இறந்து கொண்டிருக்கின்றது என்பதை உங்களிடம் தெரிவிக்கவேண்டும்." என்று சொன்னான்.

நீதிபதி, "மிருகங்கள் சண்டையிடும் என்பதை நீங்கள் அறிவீர்கள். வழக்கு தள்ளுபடி செய்யப்படுகின்றது" என்று பதிலளித்தார்.




அதைக் கேட்டு அந்த புத்திகூர்மையுள்ள கிராமவாசி, "கனம் நீதிபதி அவர்களே, நான் ஒரு தவறு செய்துவிட்டேன். நான் சொல்லவந்தது என்னவெனில், என் எருது உங்களுடைய எருதின் கொம்புகளை உடைத்திருக்கின்றது; இறந்துகொண்டிருப்பது உங்கள் எருதாகும்," என்று சொன்னான். அதைக்கேட்ட நீதிபதி சீற்றம் கொண்டார். மேலும் அந்த மனிதனுக்கு 50 ரூபாய் அபராதம் விதித்தார். இறந்துகொண்டிருப்பது நீதிபதியின் எருதாக இருந்தபொழுது, அவரது 'நீதி" வேறாக மாறியது. இதன் படிப்பினை எப்போதும் நியாயமான புரிந்துகொள்ளவல்ல நீதிபதியாக இருக்கவேண்டும் என்பதாகும். முதலில் உங்களையும் உங்கள் நோக்கங்களையும் சோதித்துப்பார்க்கவும் உங்கள் இதயத்தில் சந்தேகம் இருக்கின்றபொழுதெல்லாம் உங்களின் சொந்த அக நீதிமன்றத்தின் முன் உங்களையே சீர்தூக்கிப்பார்க்கவும்.

"இறைவனுக்கு அநேக வாசஸ்தலங்கள் உள்ளன. அவனிடத்தில் களங்கமற்றதும் நிபந்தனையற்றதுமான அன்பை செலுத்தினால் அவனுடைய வாசஸ்தலங்களுக்கு நாம் செல்லலாம்" என்று குருதேவர் கூறியுள்ளார். "நாம் அனைவரும் ஆத்மா; நாம் பரம்பொருளின் பிரதிபலிப்பு" என்று அவர் கூறும்போது நாம் அனைவரும் அமிர்தமயமான இறைவனுள்ளும் இறைவன் நமக்குள்ளும் இருக்கிறார். அவ்வாறானால் நமக்கு மரணமேது? இறைவனின் அன்புடன் நம் அன்பை நங்கூரமிட்டால் நிச்சயம் நாம் மரணமில்லாத பெருவாழ்வு வாழலாம். இறைவன் அமிர்தமானால், இறைவனுடனுள்ள வாழ்வு பெறப்பட்டால் நமக்கு அமரத்துவம் பெற்று பூரணத்துவம் அடைவோம். மரணம் ஏற்படாதே என்பதற்கான ஒரு நிகழ்வினை இங்கு கூற விரும்புகிறேன்.

## மரணம் ஏற்படாதே!

ஒரு முறை ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸருடன் விவேகானந்தர் உரையாடிக்கொண்டிருந்தார். பேச்சினிடையே ஸ்ரீராமகிருஷ்ணர் விவேகானந்தரைப் பார்த்து கேட்டார். "ஒரு கிண்ணத்தில் தேவர் உலகிலிருந்து கொண்டுவரப்பட்ட அமிர்தம் இருக்கிறது என்று வைத்துக்கொள். அந்த அமிர்தத்தை ஒரு வாய் உண்டுவிட்டல் மரணமே இல்லாத பெரும் நிலையை அடையலாம். அந்த நேரத்தில் நீ ஒரு ஈயாகப் பிறவி எடுத்திருப்பதாக நினைத்துக்கொள். அந்தக்கிண்ணத்தில் உள்ள தேவாமிர்தத்தை நீ எப்படிப் பருகுவாய்.

இதில் கவனிக்கத்தக்க ஒரு முக்கிய விஷயம் என்னவென்றால், அந்தக் கிண்ணத்தின் விளிம்புகள் மிகக்கூர்மையான முனைகளைக் கொண்டவை.

இந்த நிலைமையில் அதை எப்படி உண்ணுவாய்?" விவேகானந்தர் சற்று நேரம் யோசித்தார். "அந்தக் கூர்மையான முனைகளுக்கு நடுவே உள்ள மழுங்கிய இடைவெளியில் கவனமாகக் கால்பதித்து உட்கார்ந்துகொண்டு தலைகீழாக அந்த அமிர்தத்தைப் பருகிவிடுவேன்" என்று கூறினார்.



இதைக் கேட்ட ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் விழுந்துவிழுந்து சிரித்தார். அவர் கூறினார் "நரேந்திரா, என்ன இது சிறுபிள்ளைத்தனம்? அந்தக் கிண்ணத்தில் உள்ள அமிர்தமோ சாகாத வரத்தை அருளவல்லது. அப்படியிருக்க நீ கிண்ணத்திற்குள்ளேயே பறந்துசென்று ஒருவாய் குடித்துவிட்டு மேலேறிவிடலாமே! அல்லது தேவாமிர்தத்திற்குள்ளேயே மூழ்கி ஒருவாய் குடித்துவிட்டால்கூட உனக்கு மரணமோ, ஆபத்தோ ஏற்படாதே!" என்று கூறினார். விவேகானந்தர் தன் அறியாமையையும், அவசரத்தையும் எண்ணி வெட்கப்பட்டுக்கொண்டார்.

மேலே கண்ட பொருள் குறித்து என் கருத்தினைக் கூற விரும்புகிறேன்.

நாம் ஒவ்வொருவரும் இறைவனைத் தேடுவதும் அவனை அடைவதும் மனிதப்பிறவியின் மிகமுக்கியமானதும் உண்மையானதும் அனைத்திற்கும் மேலானதுமான பணியும் கடமையும் கூட ஆகும். மற்றவையெல்லாம் கனவாகும். அனைத்திற்கும் மேலானது அன்பு உள்ளம். அதுவே சிறந்தது மற்றும் மேன்மையானது. அன்பில்லாது எதுவுமே நிலையானது அல்ல. தூய மற்றும் நிபந்தனையற்ற அன்புடைய ஒருவனிடம் ஒரு சிறு குழந்தைபோன்று இறைவன் தாமாகவே வருவான். தேவர் உலக அமிர்தம் மரணமே இல்லாத பெரும் நிலையை அடையச் செய்யுமென்றால் இறைவனுடன் வாழ்வது, இறைவனுடனுள்ள சகவாசம் எப்படிப்பட்ட நிலையை தரக்கூடியது என்று வார்த்தைகளால் கூற இயலாது.

பிரார்த்தனை

"எனது நிலையான அமைதிபீடத்தின் மீதும்
ஆழ்ந்த தியானத்திலிருந்து ஊற்றெடுக்கும்
ஆனந்தத்திலும் உன் இருப்பைக் காண
எனக்குக் கற்பிப்பாய்!"
'ஜெய் குரு'

மீண்டும் மலரும்...

குருப்ரியா
Cell No.9894595909

# கிரகப்பிரவேசம் செய்யக்கூடாத மாதங்களும் காரணங்களும்

## வீடு கிரகப்பிரவேசம் வைக்க சிறந்த மாதம் எது?

சுபகாரியங்கள் என்றாலே அதற்கு நல்ல நேரம், நாள், மாதம் என்று அனைத்தும் பார்ப்பது இயல்பு. அதேபோல் நாம் புதிதாக கட்டிய வீட்டிற்கு கிரகப்பிரவேசம் வைத்து குடிபோவதற்கு, சிறந்த மாதம், நாட்கள் நட்சத்திரம் மற்றும் லக்னம் எது தெரியுமா?

## வீடு கிரகப்பிரவேசம் வைக்க சிறந்த மாதம் எது?

சித்திரை
வைகாசி
ஆவணி
ஐப்பசி
கார்த்திகை
தை

## வீடு கிரகப்பிரவேசம் வைக்க சிறந்த நாட்கள் எது?

திங்கட்கிழமை
புதன் கிழமை
வியாழன் கிழமை
வெள்ளிக் கிழமை

## வீடு கிரகப்பிரவேசம் வைக்க சிறந்த நட்சத்திரங்கள் எது?

அசுவினி, ரோகினி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திராடம், உத்திரட்டாதி, அஸ்வதம், சுவாதி, அனுஷம், மூலம், திருவோணம், அவிட்டம், சதயம், ரேவதி போன்ற நட்சத்திரங்கள் வீடு கிரகப்பிரவேசம் செய்வதற்கு சிறந்தவை.

## வீடு கிரகப்பிரவேசம் வைக்க சிறந்த லக்னம் எது?

ரிஷபம்
மிதுனம்
கன்னி
விருச்சகம்
கும்பம்

## எந்த மாதத்தில் வீடு கிரகப்பிரவேசம் செய்யகூடாது ஏன்?

ஆனி, ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி மற்றும் பங்குனி போன்ற மாதங்களில் வீடு கட்ட தொடங்குவது, புது வீட்டிற்கு குடி போகுதல் போன்ற சுப காரியங்கள் செய்வதை தவிர்ப்பது மிகவும் நல்லது. அதற்கான காரணங்கள்.

**ஆனி** மாதத்தில் வீடு குடி போகக்கூடாது. ஏனெனில் இந்த ஆனி மாதத்தில் தான் மகாபலி சக்கரவர்த்தி தனது ராஜ்ஜியம் முழுவதையும் இழந்தார்.

**ஆடி** மாதத்தில் வீடு குடி போகக்கூடாது. ஏனெனில் இந்த மாதத்தில் இராவணன் தனது கோட்டையை இழந்தார்.

**புரட்டாசி** மாதத்தில் வீடு குடி போகக்கூடாது. ஏனெனில் இந்த மாதத்தில் தான் இரணியன் தனது அரண்மனையிலேயே நரசிம்ம மூர்த்தியினால் சம்ஹாரம் செய்யப்பட்டார்.

**மார்கழி** மாதத்தில் வீடு குடி போகக்கூடாது. ஏனெனில் இந்த மாதத்தில் துரியோதனன் தன்து ராஜ்ஜியத்தை இழந்தார்.

**மாசி** மாதத்தில் வீடு குடி போகக்கூடாது. ஏனெனில் இந்த மாதத்தில் தான் சிவபிரான் ஆல கால விஷம் அருந்தி மயக்க முற்றார்.

**பங்குனி** மாதத்தில் வீடு குடி போகக்கூடாது. ஏனெனில் இந்த மாதம் தான் சிவன் மன்மதனை எரித்த மாதமாகும்.








## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**


தொடர்பு கொள்ளவும்:
**ஆசிரியர்: நாகராஜன்**
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

# ஸம்ஸாரத்தை நன்னா கவனிச்சுக்கோ

பெரியவாளிடம் வந்து நமஸ்காரம் பண்ணி விட்டு நின்றார் ஒரு நடுத்தர வயது பக்தர்!

“பெரியவாகிட்ட ஒண்ணு சொல்லணும்...”

“சொல்லு.....”

இவர் என்ன சொல்லப் போகிறார் என்பது பெரியவாளுக்கு தெரியாதா என்ன? ஆனாலும், அவரையே சொல்ல விட்டு, அதன் மூலம் நம் அத்தனை பேருக்கும் உபதேசிக்கத்தான்...இந்த ணீநீமீ'வீஸிரீ....!

தன் மனைவியைப் பற்றிய complaint லிஸ்டை ஒப்பித்தார் அந்த பக்தர்.

“என் பொண்டாட்டிக்கு எப்போப்பாத்தாலும் ஒடம்புல அது ஸெரியில்ல, இது ஸெரியில்ல... ஸதா... தலைவலி, தலைவலின்னு சொல்லிண்டு நேரங்காலம் இல்லாம படுத்துண்டே இருக்கா... ஸமையல் கூட ஸெரியா பண்ணறதில்ல... கொழந்தேளைக் கூட ஸெரியா பாத்துக்கறதில்ல ....”

அடுக்கிக்கொண்டே போனார்.

“சொல்லி முடிச்சியா? கொஞ்சம் மூச்சு விட்டுக்கோ!” என்பது போல், பெரியவா அவரைப் பார்த்தார்.

“இப்போ எங்கிட்ட ஒம்பொண்டாட்டியப் பத்தி சொன்ன complaintடை, ஒன்னோட ஸ்நேஹிதாள் கிட்ட சொல்லிப் பாரு! ..... ‘ஒடனே ஒன் ஸம்ஸாரத்தை டைவர்ஸ் பண்ணு”..ன்னு உபதேசம் பண்ணுவா.!

அதையே, ஒன்னோட பந்துக்கள்கிட்ட சொன்னா...... “அவ கெடக்கா கழிசடை! பொறந்தாத்துக்கு அனுப்பிச்சுட்டு, வேற நல்ல பொண்ணாப் பாத்து கல்யாணம் பண்ணிக்கோ! பாவம், ஒனக்கு அவளால, ஒரு ஸந்தோஷமும் இல்ல”..ன்னு சொல்லுவா!

ஜோஸ்யர்கிட்ட கேட்டியானா, “ராஹு தெஸை, கேது தெஸை... பரிஹாரம் பண்ணு”..ம்பார் !

டாக்டர்ட்ட போனா, எக்ஸ்ரே, blood test, ECG, EEG டெஸ்ட் எடுக்கச் சொல்லி, ஒரு பக்கம் நெறைய மருந்து மாத்ரை எழுதிக் குடுப்பார்! அப்டியே ஒன்னோட பர்ஸையும் காலி பண்ணிடுவார்!”

ஸொந்தக்காரப் பாட்டியை கேளு! “ஒனக்கு த்ருஷ்டி தோஷம்... செய்வினை... ஆபீசாரம் இருக்கு.. மந்த்ரவாதிகிட்ட போயி மந்திரிச்சுக்கோ”..ம்பா!.....

.....ஸெரி! எங்கிட்ட வந்தே! வந்ததுதான் வந்தே....” பெரியவா... என் ஸம்ஸாரத்துக்கு ஒடம்பு குணமாகணும்”ன்னு என்னை கேக்கலை... அவளுக்கு ஒடம்பு ஸெரியில்ல... அதுனால அடிச்சு வெரட்ட தயாராய்ட்டேன்”..ன்னு information சொல்ல வந்திருக்க! அப்டித்தான?..”

குரலில் கடுமை இல்லாவிட்டாலும், பெரியவா சொன்ன “ஸத்யம்“, எக்ஸ்ரே மாதிரி, மனஸில் ஓடும் எண்ணங்களை அப்படியே பட்டவர்த்தனமாக கண்ணாடி போல் காட்டியதால், பக்தருடைய உள்ளத்துக்கு, அது மிகவும் கடுமையாக இருந்தது.

பக்தர் மென்று விழுங்கினார்.

“அப்படில்லாம் இல்ல... பெரியவா” என்று ஒப்புக்கு சொன்னால், அந்த ஸத்யப் பொருளின் முன்னால் தன்னுடைய ‘பொய்’ அப்படியே பஸ்மம் ஆகிவிடாதா?

“இதோ பாரு! ஸம்ஸாரம்...ங்கறவ வாழ்க்கைத் துணை! அவளுக்கு ஒடம்புக்கு வந்துட்டா... அவளை கவனிக்கறது ஒன்னோட கடமை! இத்தனை வர்ஷமா, ஒனக்கு சோறு வடிச்சுப் போட்டிருக்காளே! ஒன்னோட ஸுக துக்கங்கள்ள பங்கு எடுத்துண்டிருக்காளே! அவளும் ஒரு ஜீவன்தானே? ஒனக்கு கொஞ்சங்கூட பஸ்சாதாபமே இல்லியே!... எத்தன கல் நெஞ்சு ஒனக்கு! நீ இனிமே தர்சனத்துக்கு வர வேணாம்.....”

பக்தர் தலையை குனிந்து கொண்டார். பெரியவாளின் வார்த்தைகள் அவருக்குள் ஏதோ ரஸவாதம் நிகழ்த்தியது.



“என்னை மன்னிச்சுக்கணும் பெரியவா... எனக்கு இவ்வளவு கடுமையான தண்டனை குடுக்காதீங்கோ! என் பொண்டாட்டியை நல்ல படியா கவனிச்சுக்கறேன்... தர்ஸனத்துக்கு தடை போடாதீங்கோ!..”

அழுதார்.

உடனே பனியாய் குளிர்ந்தார் பெரியவா.

“ஒன்னோட ஸம்ஸாரத்தை, கோட்டக்கல் ஆயுர்வேத வைத்யர்கிட்ட அழைச்சுண்டு போயி ட்ரீட்மென்ட் குடு! chronic head ache-ங்கறதால, ரெண்டு மூணு மாஸம், வைத்யம் பண்ண வேண்டியிருக்கும்... க்ஷேமமா இருங்கோ!..”

ப்ரஸாதம் குடுத்தனுப்பினார்.

இது புருஷன், பெண்டாட்டிக்கு மட்டும் இல்லை! மனிதர்களாக பிறந்த நாம், மனிதர்களுக்கு மட்டுமில்லாமல், உதவி தேவைப்படும் மற்ற ஜீவன்களுக்கும் நம் அன்பை, பாதுகாப்பை அளித்தால், அது கூட நாம் பெரியவாளுக்குச் செய்யும் ஆராதனைதான்!

நன்றி: பெரியவா மகிமைகள்

www.aanmeegamalar.com



மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

# மன அழுத்தத்தை சமாளிக்கும் திறனை பாதிக்கும்

- மன அழுத்தத்தை சமாளிக்கும் திறனும் இயலாமையும்
- மன அழுத்தத்தை சமாளிக்கும் நமது திறனை பாதிப்பது எது
- மனஅழுத்தத்தின் காரணியாக ஆளுமை

## 1. மன அழுத்தத்தை சமாளிக்கும் திறனும் இயலாமையும்

இந்த பகுதியில் நாம் எவ்வாறு மன அழுத்தத்தை சமாளிக்கிறோம் என்பதை இரண்டு சித்திரங்கள் வாயிலாக வெளிப்படுத்துகிறோம். (படம் 1 அ) சித்திரத்தில் ஒரு மனிதன் நான்கு பெரிய மூட்டைகளை சுமந்து செல்கிறான்.

இந்த மனிதன் சுமக்கும் ஒவ்வொரு மூட்டையும் பின்வரும் வாழ்வின் பிரச்சனைகளுடன் தொடர் புடையதாகும்.

கல்வியை புறக்கணிக்கும் மகள், மனைவியுடன் சச்சரவுகள், நோய்வாய்ப்பட்டிருக்கும் மகன், நிதி நெருக்கடி.

ஆழ்மனது ஒரு குறிப்பிட்ட அளவு பதட்டத் தையே தாங்கிக்கொள்ளும். இது எதிர்கொள்ளும் பிரச்சனைகளின் அளவு, தீவிரம் மற்றும் நீடிக்கும் கால வரையறை ஆகியவற்றை பொறுத் தது. (படம் 1 அ) என குறிப்பிட்டிருக்கும் சித்திரத் தில் காட்டப்பட்டது போல தற்போது அந்த மனிதன் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை தாங்கிக் கொண்டு வாழ்வை நடத்திச்செல்ல அவனால் முடிகிறது.

கல்வியை புறக்கணிக்கும் மகள், மனைவியுடன் சச்சரவுகள், நோய்வாய்ப்பட்டிருக்கும் மகன், நிதி நெருக்கடி.

ஒட்டகத்தின் முதுகை உடைத்த கடைசி துரும்பு உத்தியோக உயர்வு கிடைக்காமை / கைத்தொலைபேசியை தவறவிடுதல்

(படம் 1 ஆ) எனும் சித்திரத்தில் காண்பிக்கப் பட்டது போல பதவியுயர்வு கிடைக்காமை போன்ற கூடுதலான பிரச்சனைகளின் காரணமாக பதட்டம் அதிகமாகி, மருத்துவரீதியாக காண்பிக்கப்படும் மனஅழுத்தம் வெளிப்படுகிறது. ‘ஒட்டகத்தின் முதுகை உடைத்த கடைசி துரும்பு’ எனும் பழமொழிக்கு ஏற்றாற்போல் ‘பதவியுயர்வு கிடைக்காமை’ என்பதே அத்துரும்பாக இருந்து எதிர்மறை உணர்வுகளுக்கு உட்படுத்தி ஒரு மனிதனின் மனச்சோர்வுக்கு காரணமாக அமை கிறது. ஒருவருடைய ஆளுமையை பொறுத்து ஒட்டகத்தின் முதுகை உடைத்த கடைசி துரும்பு வேறுபட்டதாக அமையலாம். பதவியுயர்வு கிடைக்காமை போன்ற பெரிய விஷயமாகவும் இருக்கலாம். கைத்தொலைபேசி காணாமல் போனது போன்ற சிறிய விஷயமாகவும் இருக்கலாம். இரு நிகழ்வுகளும் ஒருவரை மனச்சோர்விற்கு உட்படுத்தலாம். வெளியிலிருந்து பார்ப்பவருக்கு இந்த மனிதரின் எதிர்வினை சமமற்றதாக இருக்கலாம். இந்த இறுதி துரும்புக்கு முன்பு ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான நிகழ்வுகளையும் பிரச்சனைகளின் தொடரையும் அவர்கள் காணவில்லை. அதுவே இம்மனிதரை

உதாரணம் 1அ : மன அழுத்தத்தை சமாளிக்க கூடிய திறன்




உதாரணம் 1 ஆ : மன அழுத்தத்தை சமாளிக்க இயலாமை








விளிம்பு வரை கொண்டு வந்து மனச்சோர்விற்கு உள்ளாக்கி இருக்கிறது.

ஒரு தனிப்பட்டவரின் சிரமத்தையும் மன அழுத்தத்தையும் சமாளிக்கும் இயலாமையே துன்பத்தை ஏற்படுத்துகிறது

## 2. மன அழுத்தத்தை சமாளிக்கும் நமது திறனை பாதிப்பது எது?

ஒருவரிடம் மன அழுத்தத்தை எதிர்கொள்ள காணப்படும் சக்தியை பொறுத்து பதட்டத்தை எதிர்கொள்ள காணப்படும் அவரின் திறனும் வேறுபடும். விரும்பத்தகாத பண்புகள் நமது ஆளுமையில் (ஆளுமை குறைகள்) காணப்படும் பொழுதும் முடிவடையாத காரியங்கள்காணப்படும் பொழுதும் கிடைக்கக்கூடிய மனோ சக்தி மிகவும் குறைவாகவே இருக்கும்.

நாம் முன்பு குறிப்பிட்டவாறு ஆளுமை குறை கள் என்பவை கோபம், பயம், சோம்பேறித்தனம், சந்தேகம், பொய் கூறுதல் மற்றும் நம்பிக்கை அற்றிருத்தல் போன்றன. இவ்வாறான விரும் பத்தகாத பண்புகள் நாள் முழுதும் நமது எண் ணங்களை உட்கொண்டு நமது மனோ சக்தியை சூறையாடி விடுகின்றன.

முடிக்கப்படாத விஷயங்கள் என்பது தற்போது கூட ஒருவர் பயப்படக்கூடிய, நினைத்தாலே பதட் டத்தை ஏற்படுத்தக்கூடிய கடந்த காலத்தில் நடந்த விரும்பத்தகாத சம்பவங்கள் ஆகும். உதார ணமாக, ஒரு மாணவன் பரீட்சையில் தோற்கும் போது அவனுக்கு அது கடுமையான மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. தாம் எவ்வாறு அந்த தருணங்களில் வேதனைப்பட்டோம் என நினைத்து மறுபடியும் அவ்வாறான தோல்வி ஒன்று ஏற்பட்டால் அந்த வேதனையை மீண்டும் அனுபவிக்க வேண்டுமே என பீதி அடைகிறான். எனவே அவனுடைய மனது முடிக்கப்படாத விஷயங்களை தொடர்ச்சியாக சுமந்து வருகிறது. மன அழுத்தத்திற்கும் சிரமத்திற்கும் மனம் எவ் வாறு எதிர்விளைவு காண்பிக்க வேண்டும் என்று இந்த முடிக்கப்படாத விஷயங்கள் மனதை கட்டுப்படுத்துகின்றன. அதே உதாரணத்தை எடுத்துக்கொண்டால், மன அழுத்தத்தை ஏற்படுத்திய பரீட்சை தோல்வி வாழ்வில் மற்றைய துறைகளில் ஏற்படக்கூடிய தோல்விகளுக்கு அதே முறையில் மன அழுத்தமாகவோ போதைக்கு அடிமை ஆதலின் மூலமோ எதிர்விளைவை காண்பிக்கலாம். செய்ய வேண்டிய காரியங்களின் நீண்ட பட்டியலும் நமக்கு சிரமத்தை ஏற்படுத்தி முடிக்கப்படாத விஷயங்களை அதிகரிக்கலாம்.

நம்மிடம் அதிகமான ஆளுமை குறைகளும் முடிக்கப்படாத விஷயங்களும் காணப்படும் போது அவற்றால் உண்டாகும் பதட்டத்தை நடுநிலைப்படுத்த மிக கூடிய மனோ சக்தி விரயமாகிறது. இதன் காரணமாக வேறுபட்ட நபர்களிற்கிடையே மன அழுத்தத்தை எதிர்கொள்ள காணப்படும் சக்தியும் வேறுபடும். எனவே கடந்த கால நிகழ்வுகளினாலும் முடிக்கப்படாத விஷயங்களினாலும் உண்டாக்கப்படும் பதட்டமும், ஒருவரின் ஆளுமையில் காணப்படும் விரும்பத்தகாத பண்புகளுமே, அவருடைய துன்பத் திற்கும், வாழ்வில் மன அழுத்தத்தை சமாளிக்க இயலாமைக்கும் காரணமாகும்

## 3. மனஅழுத்தத்தின் காரணியாக ஆளுமை

இன்னொரு முக்கியமான விஷயம் என்ன வென்றால், ஒரு சந்தர்ப்பம் எப்பொழுதும் தானாக மனஅழுத்தத்தை கொடுக்காது. ஒருவர் அதனை நோக்கும் முறையை பொறுத்தே உள்ளது. ஒருவரின் ஆளுமையை பொறுத்து சந்தர்ப்பம் ஒன்றை நோக்கும் விதமும் வேறுபடும். உதாரணமாக, பார்ட்டி ஒன்றிற்கு செல்வதை ஒரு நிகழ்வாக கருதினால், பெரும்பாலோருக்கு அது மகிழ்ச்சிகரமான ஒரு விஷயமாகும். ஆனால், கூச்ச சுபாவமுள்ள ஒருவருக்கு அது மனஅழுத்தத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பம். பின்வரும் அட்டவணையில், ஆளுமையில் காணப்படும் விரும்பத்தகாத பண்புகள் எவ்வாறு ஒரு நிகழ்வை மன அழுத்தம் நிறைந்ததாக மாற்றுகிறது என்தற்கு சில உதாரணங்களை காண்போம்.

| விரும்பத்தகாத ஆளுமை குறைகள் | மனஅழுத்தத்தின் காரணியாக மாறும் சந்தர்ப்பம் |
| --- | --- |
| தன்னம்பிக்கை குறைவு | வேலைக்கான நேர்முகத்தேர்விற்கு செல்லுதல், சவாலான வேலை நிலைமை |
| உணர்ச்சி வசப்படுதல் | உணர்ச்சி வசப்படுதல் பாட்டி பரிசாக அளித்த மோதிரத்தை தொலைத்து விடுதல் |
| கூச்ச சுபாவம் | கூச்ச சுபாவம் எதிர்பாலாருடன் உரையாடுதல் |
| உணர்ச்சி வசப்படுதல்/ எதிர்பார்ப்பு | உணர்ச்சிவசப்படுதல்/ எதிர்பார்ப்பு குடும்ப அங்கத்தினருடனோ நெருங்கிய நண்பர் களுடனோ சர்ச்சையில் ஈடுபடுதல் |

ஆளுமை குறைகளும் அகம்பாவமும் குறைவாக காணப்படும் நபர்களால் கூடிய அளவு மனஅழுத்தம் நிறைந்த சந்தர்ப்பங்களை கையாள முடியும். மாறாக, ஆளுமை குறைகள் அதிகமாக இருப்பவர்கள் எந்த வித மன அழுத்தத்திற்கும் சுலபமாக உடைந்து போவார்கள்.

மேலும் தகவல்களுக்கு : www.ssrf.org, ph: 9380949626




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
•••
இணை ஆசிரியர்
முருகன்
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா Cell 9894595909
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
•••
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070







# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து பிரதிகளையும் பார்த்து படித்து மகிழ

**www.aanmeegamalar.com**

பாருங்கள் அனைவருக்கும் பகிருங்கள்

## தொடர்ந்து வெளிவர உதவுங்கள்

நமது ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் மூலம் வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தினை பல்வேறு இணையதளங்களில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இதற்கு முந்தைய இதழ்களையும் வரப்போகின்ற மற்ற இதழ்களையும் தொடர்ந்து இணையதளத்தில் நிரந்தரமாகவும், இலவசமாகவும் ஆன்மிக அன்பர்கள் தொடர்ந்து பார்த்து, டவுன்லோடு செய்யும் வகையில் பணிகள் தொடர்கின்றன. எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம். நீங்கள் செய்யும் சிறு உதவி எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

மேலும் தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8825844033
aanmeegamalar@gmail.com

# "சர்வம் கிருஷ்ணார்பனம்"

"சர்வம் கிருஷ்ணார்பனம்" இந்த வாக்கியத்தை முதன் முதலில் சொன்னவர் கர்ணன்.

முன்னொருநாளில் அந்தணரால் கொடுக்கப் பட்ட சாபத்தால் போர் தருவாயில் கர்ணனின் தேர் சகதியில் சிக்கிக் கொள்கிறது.

பரசுராமரின் சாபத்தால் முக்கியமான தருணத் தில் அஸ்திரத்திற்கான மந்திரம் கர்ணனுக்கு மறந்து போகிறது.

கர்ணன் உடல் மீது அர்ஜுனனின் அம்புகள் தைத்தது. ஆனாலும் உயிர் பிரியவில்லை.

விதிப்படி இறப்பின்போது உயிர் பிரியவேண்டும். ஆனால் கர்ணனின் கொடை வள்ளலால் புண்ணியம் மிகுந்து இருந்ததால் அவரின் உயிர் பிரியாமல் இருந்தது.

கர்ணனுக்கு மோட்சத்தை அளிக்க கிருஷ்ண பகவான் அந்தணர் வேடத்தில் கர்ணன் முன் தோன்றி "தான் மலைகளில் தவம் பூண்டிருப்ப தாகவும் கர்ணனின் கொடை குறித்து அறிந்ததால் கர்ணனிடன் யாசகம் பெற வேண்டி வந்ததாக" உரைக்கிறார்.

யாசகம் கேட்டு வந்திருப்பது அந்தனர் அல்ல கிருஷ்ணர்தான் என்றுணர்ந்த கர்ணன். என்னிடம் இல்லாததை கேட்டு என்னை இல்லை என்று சொல்ல வைத்துவிடாதே என்று அந்தனர் வேடம் பூண்ட கிருஷ்ண பரமாத்மாவை பணிகிறான்.

கிருஷ்ணரும் "நீர் செய்த புண்ணியத்தை கொடுப்பாயா" என்று வினவிகிறார்.

அதற்கு கர்ணன் "நான் செய்த, செய்யும், செய்யப் போகும் புண்ணியம் அனைத்தையும் உனக்கு தருகிறேன்" என்று இதயத்தில் தைத்த அம்பை எடுத்து தனது குருதியின் வாயிலாக தர்மம் செய்கிறான்.

அந்த சமயத்தில் கிருஷ்ணரை பார்த்து சர்வம் கிருஷ்ணார்பனம் என்று கூறுகிறான்.

யாசகத்தை பெற்றுக் கொண்டு தனது விஸ்வரூபத்தை கர்ணனுக்கு காட்டுகிறார்.

கர்ணன் பரவச நிலை அடைந்து "எனக்கு முக்தி வேண்டும் அப்படி முக்தி இல்லை என்றால் வரும் பிறப்புகளிலும் இல்லை என்று சொல்லா இதயம் வேண்டும் என்று வரம் கேட்கிறான்.

கர்ணன் கேட்ட வரத்தை கிருஷ் ணரும் அருள்கிறார்.

இங்கே யாசகம் கொடுக்கும் போது கிருஷ்ணரின் கை தாழ் கிறது. கர்ணனின் கை உயருகிறது.

கர்ணனுக்கு ஒரு ஆசை உண்டு அது யாதெனில் எல்லாருக்கு யாசகம் செய்தாயிற்று, கிருஷ்ண பகவானுக்கு மட்டும் யாசகம் செய்யவில்லை என்பதுதான்.

பகவான் கிருஷ்ணன் தன் பக்தனுக்காக இங்கே தன்னை தாழ்த்திக் கொள்கிறார்.



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033



# நிலையான ஆனந்தத்தை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டாமல்

# தற்கால சுகத்தை தேடியே நமது மனம் உருண்டோடும்

கடவுள் என்றால் என்ன? அவரது தன்மை என்ன? அவர் எப்படி இருப்பார்? எதற்காக அவர் இருக்கிறார்? என்றெல்லாம் ஆயிரம் கேள்விகணைகள் நம் முன்னால் எழுந்து நிற்கிறது. அவைகள் ஒவ்வொன்றிற்க்கும் விடைகாண முற்படுவது தான் மனித பிறவியின் இலட்சியமென்று நமது முன்னோர்களும் சொன்னார்கள் நமது அனுபவமும் சொல்கிறது.

கடலுக்கடியில் விழுந்தவன் மூச்சி காற்றை தேடுபவனை போல நாமும் விடை தேடவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். நம் முன்னே அந்தகால இருள் சூழ்ந்திருக்கிறது. மையிருட்டு நம் கண்களை கட்டிபோட்டிருக்கிறது. அறியாமையும், மாயையும் நம்மை சவுக்கு கொண்டு அடிக்கிறது. நமது உடம்பிலிருந்து சொட்டுகிற ஒவ்வொரு சொட்டு குருதியும் அறிவு பசியால் நெருப்பில் விழுந்து ஆவியாகிவிடுகிறது. எனவே அனைத்து நோய்க்கும் ஒரே மருந்தாக இருக்கும் கடவுளை பற்றிய ஞானத்தை நாம் பெற்றாக வேண்டும்.

இந்து மதத்தில் பலவித கொள்கைகள் இருக்கிறது. கடவுள் இருக்கிறார் என்று ஒரு கொள்கை சொல்கிறது, அவர் இல்லை என்று இன்னொரு கொள்கை மறுக்கிறது. கடவுளுக்கு உருவம் உண்டு என்று சொல்கிற கொள்கையும் உண்டு, உருவமே கிடையாது என்று மறுத்து பேசுகிற கொள்கையும் உண்டு. இப்படி ஆயிரம் கொள்கை பேதங்கள் உள்ள இந்து மதத்தை பின்பற்றி தான் கடவுளை பற்றிய நமது ஆராய்ச்சியை செய்ய போகிறோம். காரணம் நாம் இந்துக்கள். பிறந்த நாள் முதற்கொண்டு இந்துக்களாகவே வாழ்ந்து வருகிறோம். நமது மரணமும் ஒரு இந்துவின் மரணமாகவே இருக்கும். நமது சொல்லிலும், செயலிலும் இரத்தத்திலும், தசை அணுவிலும் இந்து என்ற உணர்வே ஆழ பதிந்து விட்டது. எனவே குழப்பங்கள் இருந்தாலும் குளறுபடிகள் மிகுந்து கிடந்தாலும் கடவுள் என்ற தத்துவத்தின் உண்மை பொருளை இந்து மதத்தின் வழியாகத் தான் நம்மால் தேட முடியும்.

இந்து மதம், தத்துவங்கள் மிகுந்த செழிப்பான பீடபூமியாகும். இங்கே ஆயிரம் தத்துவ பிரிவுகள் இருந்தால் அவற்றில் மகுடம் வைத்தது போல் இருப்பது அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் என்ற மூன்று பிரிவுகளே அவற்றில் மிக முக்கியமானது அத்வைதமாகும். அந்த அத்வைத தத்துவப்படி கடவுள் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியும் அல்ல எனவே அவரை அவன் என்றோ அவள் என்றோ அழைப்பது சரியான கருத்து அல்ல. அது அல்லது இது என்று சொல்வோதோடு அதற்கு பிரம்மம் என்ற பொதுப்பெயரை தருகிறார்கள் பிரம்மம் என்பது எந்த பாலினமும் அல்ல பாலினங்களின் எல்லைகளை தாண்டியது பிரம்மமாகும்.

பிரம்மம் ஸ்படிகத்தை விட தூய்மையானது, சர்வ சக்தி வாய்ந்தது, எங்கும் எதிலும் எப்போதும் நிறைந்து நிலைமாறாதது. இன்று இருந்து நாளைக்கு இல்லாமல் போவது அல்ல என்றும் நிலைத்திருக்கும் பிரம்மம் அச்சமற்றது, ஆசைகளற்றது அதனால் சுதந்திரமானது, ஆனந்தமானது எந்த உருவத்தாலோ எந்த குணத்தாலோ வரையறை செய்து எல்லைவகுக்க முடியாதது. இப்படி இருந்தது அப்படி இருந்தது என்று ஆயிரம் வர்ணனைகள் செய்தாலும் ஆயிரம் விளக்கம் கூறினாலும் விளக்கிட முடியாதது, விளங்கிடவும் ஆகாதது. மனிதனது மனதாலும் உடலாலும் அறிந்து கொள்ள முடியாதது என்று அத்வைத சாஸ்திரம் பிரம்மத்திற்கு அழகிய விளக்கம் தருகிறது.

பரபிரம்மம் என்று அழைக்கப்படுகிற பரந்தாமன் கிருஷ்ணன் தனது பகவத் கீதையில் பத்தாம் அத்தியாயம் இரண்டாம் சுலோகத்தில் கூறுகிறார் பிரம்மத்தின் தோற்றத்தை தேவர்களும் அறியார், தவத்தில் சிறந்த ரிஷிகளும் அறியார் என்று, அப்படி இருக்கும் போது அற்ப மானிட ஜீவன்களாகிய நம்மால் அதை அறிந்து கொள்ள முடியுமா? அறிந்தாலும் தெரிந்தாலும் புரிந்து கொள்ள முடியுமா? என்ற தயக்கம் மயக்கம் வருகிறது ஆனாலும் அது தேவையற்றது.

அறிய முடியாத அதிசூட்சும நிலையில் உள்ள பிரம்மத்தை சாதாரண மனிதன் உணர்ந்து கொள்ள முடியாது எனும் போது அந்த பிரம்மத்தால் என்ன பயன் அது இருந்தால் என்ன? போனால் என்ன? என்ற விரக்தி மனப்பான்மை வந்துவிடுவது இயற்கை. ஆனால் நமது பெரியவர்கள் முன்னோர்கள் நம்மைவிட புத்திசாலிகள் நிலையான ஆனந்தத்தை அறிந்து கொள்ள ஆர்வம் காட்ட மாட்டோம் தற்கால சுகத்தை தேடியே நமது மனம் உருண்டோடும் என்று அவர்களுக்கு நன்றாக தெரியும். அதனால் பிரம்மத்தை அறிந்துகொள்ள சரியான சுலபமான வழி ஒன்றை கூறினார்கள்.

முதலில் பிரம்மத்திற்கு உருவம் இருக்கிறது என்பதை ஏற்றுகொள்ள வேண்டும். அந்த உருவம் அழகானது, இரசிக்க தக்கது, வணங்க தக்கது, ஆற்றல் மிகுந்தது என்ற எண்ணங்களை உறுதியாக வளர்த்து கொள்ளவேண்டும். இந்த எண்ணம் வளர்ந்த பிறகு ஆழமாக வேரூன்றி நிலைத்த பிறகு இறைவனது திருவுருவத்தை நினைத்தவுடனேயே பெற்ற குழந்தையை சிந்தித்தவுடன் தாயின் முலைப்பால் சுரப்பதை போல பக்தி சுரக்க வேண்டும், அன்பு பெருக






வேண்டும், ஆனந்தம் பிரவாகமாக அலையடிக்க வேண்டும் அதன்பிறகு மெதுவாக மிக மெதுவாக கடவுளுக்கு கொடுத்த உருவத்தை மறக்க முயற்சி செய்து காணுகின்ற பொருளெல்லாம் கடவுள் இருப்பதாக பார்க்க பழக வேண்டும். அப்படி பழக பழக நோக்கும் இடமெல்லாம் நிறைந்திருக்கும் நிர்மல பொருளான பரம்பொருளின் சூட்சுமத்தை, பரமாத்மாவின் இரகசியத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல சாமான்ய மனிதனும் புரிந்து கொள்ளலாம் என்று அனுபவ வாக்கியமாக நமது முன்னோர்கள் தந்துவிட்டு சென்று இருக் கிறார்கள்.

ஆதிசங்கரரை தெரியும் உங்களுக்கு அவரின் அத்வைத கொள்கையும் அறியாதவர்கள் அல்ல நீங்கள் அவர் உலகம் பொய் என்றார், உயிர்கள் பொய் என்றார், கண்ணில் காணும் பொருட்கள் எல்லாம் பொய் என்றார், எல்லாமே மாய நிழலில் போலி தோற்றங்கள் என்று சொன்னார், கடவுள் மட்டும் தான் நிஜம், பிரம்மம் மட்டும் தான் சத்தியம், மற்றவை அனைத்தும் நிதர்சனம் இல்லாத பிம்பங்கள் என்றார். அப்படி கடவுளை பிரம்மமாக நிர்குண வடிவமாக ஆதிச்சங்கரரே சிவானந்தலகரி பாடினார், செளந்தர்ய லகரி தந்து மகிழ்ந்தார், பஜகோவிந்தம் தந்து நெஞ்சுருகினார், சுப்ரமணிய புஜங்கம் பாடினார் என்றால் அவர் வேற்றுமையை விதைக்க வந்தாரா? குழப்பங்களை முன்னெடுக்க வந்தாரா? இல்லை! இல்லை! அருவமான பொருளை முதலில் உருவமாக வணங்கு அதன் பிறகு உருவம் மறைந்து அருவம் தெரியுமென்று அனுபவத்தை அனுபவத்திற்கு ஏற்றதை சொல்லவே வந்தார். அதனால் தான் ஆறு பிரிவுகளாக கிடந்த இந்து மதத்தை ஒரே பிரிவாக மாற்றினார்.

உருவமற்ற பிரம்மத்தை உருவம் உள்ளதாக காட்டுகிறபோது, அப்படி காட்டுவதற்கு துணையாக ஆத்மா, பிரகிருதி என்ற இரண்டு அம்சங்களை தத்துவ ஞானிகள் முன்வைக்கிறார்கள். ஆத்மா தூய்மையானது, நிலையானது அதன் ஒரு பகுதி மையமாக இருந்து கொண்டு தன்னை சுற்றி இன்னொரு பகுதியை உடலை இயக்க வைக்கும் உயிராக வெளிப்படுத்துகிறது பிரகிருதி என்பது ஆத்மாவின் உடலை போன்றது, பிரகிருதியில் இருந்தே நமது கண்களுக்கு தென்படுகிற பிரபஞ்சமும் உலகமும் உலகத்திலுள்ள ஜீவன்களுக்கான உடல்களும் படைக்க படுகிறது.

கணக்கு ஒன்று போடவேண்டுமென்றால் அதற்கு தக்க விடை காண சூத்திரம் ஒன்று வேண்டும் எல்லாவற்றிற்கும் ஆரம்பமாக இருப் பது சூத்திரம். சூத்திரம் இல்லை என்றால் எதற்கும் துவக்கம் என்பதே கிடையாது. அப்படி பிரகிருதி தத்துவத்தால் படைக்கப்பட்ட உயிர், அதாவது பிரபஞ்சம் முழுவதும் முதல் முதலில் தோன்றிய உயிர் ஹிரண்யஹர்பர் என்ற பெயர் கொண்டதாகும். இவரே சூத்திர ஆத்மா அதாவது மற்ற உயிர்கள் தோன்றுவதற்கு காரணமான ஆத்மா.

இவரின் இன்னொரு பெயர் பிரம்மன் என்று உபநிஷதங்கள் அழைக்கிறது. தானே முளைத்த சுயம்புவான ஹிரண்யஹர்ப்ப பிரம்மதேவனே கடவுளாகவும் வடிவேடுக்கிறார் என்று பூரணங்களும், மனுநீதி சாஸ்திரமும் கூறுகின்றன. பிரம்மதேவரின் சக்தி எல்லையற்றது, அவர் தம்மிடமிருந்து பிரபஞ்சத்தை தோற்றுவித்தார், ஒரே நேரத்தில் பிரபஞ்சமாகவும் அதனுள் இருக்கின்ற உயிர்களாகவும் மாறுகிறார். இந்திரன், அக்னி சூரிய சந்திரன் போன்ற தேவ தேவதைகள் பிரம்மனால் படைக்கப்பட்ட உயிர்களே, சாதாரண உயிர்களாக சிருஷ்டிக்கப்பட்டு தனது கர்மாக்களால் உயர்வான நிலையை அடைந்த புண்ணிய ஜீவன்களே அவர்கள்.

மனிதனுக்கு அவனது உடலையும், மனதையும், அறிவையும் உயிரை இயக்க கூடியதும், ஆத்மா என்ற பிரம்மனே மனிதனது உடல் பிரகிருதியால் ஆனது. மனிதனுக்குள் இருக்கின்ற இறைத் தன்மையாகிய ஆத்மா பிரகிருதியின் மாய வலைக்குள் சிக்கி இருப்பதனால் மயக்கம் அடைகிறது, கலக்கம் அடைகிறது தனக்கு எந்த சக்தியும் இல்லையோ என்று பொய்யாக, போலியாக புலம்பி கிடக்கிறது. மனிதன் தான் மாயை என்ற கயிற்றினால் கட்டப்பட்டிருக்கிறோம், அதனால் சர்வ சக்தியை இழந்து நிற்கிறோம், தனது பலம் ஆளுமை முழுமையானது அல்ல தரம் குறைந்ததே என்று நினைத்து கலங்குகிறான். அந்த கலக்கத்தின் விடிவாக எல்லையற்ற சக்தியுடனும், ஆழமான கருணையுடனும் அமானுஷ்யமான தன்னை காக்க ஒரு சக்தி வரும். தான் நிச்சயம் இரட்சிக்கபடுவோம். தனது பாவ சுமைகளை இறக்கி வைக்க சுமை தாங்கி கல்லொன்று கிடைக்கும் என்று நம்புகிறான்.

விவரிக்க முடியாத அந்த அமானுஷ்யமான சக்தி சில மனிதர்களுக்குள் புகுந்து செயல்படுவதாக பல மனிதர்கள் நம்பினார்கள். அத்தகைய தெய்வ தன்மை வாய்ந்த மனிதர்களே இறைவனின் தூதர் என்றும், கடவுளின் குமாரர் என்றும் அழைக்கப்படுகிறார்கள். அந்த வகையில் முகமது நபியை இஸ்லாம் கடவுளின் திருத்தூதராக காண்கிறது. கிறிஸ்தவம் ஏசுவை தேவ குமாரனாக மதிக்கிறது. ஆனால் இந்து மதமோ தெய்வீகமான சக்தி தனக்கென்று வேறு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்காமல் தானே உயிர் கொண்டு, உடல் கொண்டு ஒரு ஜீவனாக உலகத்தில் ஜனனம் எடுக்கிறது அதன் பெயரே அவதாரம் என்கிறது.

கடவுள்மீனாகவும், ஆமையாகவும், பன்றியாகவும் அவதாரம் எடுக்கிறார். அப்படி அவதாரம் எடுக்கிறபோது சம்மந்தப்பட்ட உடல்களில் கர்ப்பம் தரிக்கிறார் என்று ஸ்ரீ வைஷ்ணவம் கூறுகிறது. சைவ சமயம் அவதாரத்தின் ஜனனத்தை வேறு விதமாக காண்கிறது. கர்ப்பவாசம் என்பது இறைவனுக்கு தேவையில்லை அவர் தானே நேரடியாக அவதாரத்தை எடுக்கிறார் என்று சைவ சமயம் நம்புகிறது. அவர் கர்ப்பத்தில் வருகிறாரா? கர்ப்பம் இல்லாமல் சுயம்புவாக வருகிறாரா? என்று சாதாரண மனிதன் ஆய்வுகள் நடத்துவது இல்லை, எப்படி வந்தாலும் அவரால் நடந்த, நடக்க போகும் நன்மைகளுக்கு ஆயிரம் கோடி வந்தனம் என்று போற்றி வணங்குகிறான்.

சிறிய உதவியை கூட பெரும் பேராக கருதுகிற மனிதன் அவதாரங்களின் பேராற்றலை சாமான்யமாக கணித்து விடுவானா என்ன? தர்மம் குன்றி அதர்மம் தலைதூக்கும் போதெல்லாம் தர்மத்தை காக்க மீண்டும் மீண்டும் வருவேன் என்று இறைவனாகிய கண்ணபெருமான் கீதையில் சொல்கிறான்.

அதனால் தான் இந்துக்களாகிய நாம் இயேசு, முகமது நபி போன்றோர்களை அந்நியர்கள் என்று வெறுத்து ஒதுக்காமல் போற்றி வணங்க தலைப்படுகிறோம். கண்ணன் கீதையில் பத்தாவது அத்தியாயத்தில் நானே விஷ்ணு, நானே சங்கரன், நானே ராமன் என்று ஒரு பிரம்மம் பல வடிவுகளாக, கடவுள்களாக வருவதை தெளிவாக கூறுகிறார். இதே தான் ரிக் வேதம் ஒன்றாக இருப்பதை பலவாக அறிஞர்கள் காண்கிறார்கள் என்று அழகாக சொல்கிறது. மீண்டும் கண்ணன் சொல்கிறான் மற்ற தேவதைகளை சிரத்தையோடு வணங்கும் எவனும் முறை தடுமாறினாலும் என்னையே வணங்குகிறார்கள் என்கிறான். நீரிலுள்ள குளிர்ச்சி நான், தீயில் அனல் நான், சூரிய சந்திரர்களில் வெளிச்சம் நான், புத்திமான்களின் புத்தியும் நானென்று கூறுகிற கண்ணன் கண்ணுக்கு தெரிகிற எந்த வடிவமும், எந்த சக்தியும் இறைவனே என்று கவிதா விலாசத்தோடு சொல்கிறான்.

இதை தான் மகாகவி பாரதியார்

பாலும் தெய்வம் பதியும் தெய்வம்
பாலைவனமும் கடலும் தெய்வம்
ஏழு புவியும் தெய்வம் தெய்வம்
எங்கும் தெய்வம் எதுவும் தெய்வம்

என்று சொல்கிறார். இதுமட்டுமல்ல அன்பே கடவுள், அறிவே கடவுள், உண்மையே கடவுள், ஒளியே கடவுள், ஒலியே கடவுள் என்று கடவுளுக்கு பலவித விளக்கங்கள் கொடுக்கப்படுகிறது. யானையை பார்த்த குருடர்கள் ஆளாளுக்கு ஒரு கதையை சொன்னது போல இறைவனை பற்றி ஞானிகள் ஒவ்வொருவரும் தனது போக்கில் தான் அறிந்ததை கூறி சென்றிருக்கிறார்கள். அவைகள் அனைத்தும் உண்மையே, ஆனால் அவைகள் மட்டும் உண்மை அல்ல அவைகளுக்கு மேலும் உண்மை இருக்கிறது.

பண்டிதர் ஜவகர்லால் நேரு சொன்ன ஒரு விளக்கத்தை கூற நினைக்கிறேன். ஒரு மரத்தில் ஒரு பூவை பார்க்கிறோம் அதனால் மரத்தை பூவென்று சொல்லிவிடலாமா?

**அருவமான பொருளை முதலில் உருவமாக வணங்கு அதன் பிறகு உருவம் மறைந்து அருவம் தெரியும்**

அதே மரத்தை ஒருவன் இலையையும் இன்னொருவன் அடிமரத்தையும் பார்க்கிறான். மரத்தின் தனித்தனி பாகத்தை தனித்தனி மனிதர்கள் பார்க்கிறார்கள் மரமென்றால் பூ, மரமென்றால் இலை, மரமென்றால் அடிமரம் என்று கூறி வாதிட்டு சண்டைபோட்டு கொள்ளலாமா? என்று கேட்கிறார் நேரு.

கடவுளும் அப்படி தான் ஒருவருக்கு அவர் அல்லா, ஒருவருக்கு அவர் கர்த்தர், ஒருவருக்கு அவர் பிரம்மம், ஒருவர் கடவுளை உருவத்தோடு காண் கிறார், இன்னொருவர் அவருக்கு உருவம் இல்லை என்று காண்கிறார். அவரவர் நிலையில் அனைத்து வாதமும் சரியானதே, கடவுள் எல்லாமாகவும் இருக்கிறார் அவரை எப்படி வேண்டுமென்றாலும் பார்க்கலாம் வணங்கலாம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

## ராமன் என்றால் நன்மை மட்டுமே!

ராவணன் சீதையை அடைய பேராசையுடன் அலைந்தான். அந்த சமயத்தில் அவனுடைய பரிவாரத்தில் இருந்தவர்கள் யோசனை ஒன்றைத் தெரிவித்தனர். “” நினைத்த வடிவத்தில் எங்கு வேண்டுமானாலும் செல்லும் சக்தி படைத்தவர் நீங்கள். ஏன் ராமனாக மாறி சீதையிடம் செல்லக் கூடாது. ராமனின் வடிவைக் கண்டதும் அவள் மயங்கி விடுவாள். சுலபத்தில் உங்கள் எண்ணமும் பலித்துவிடும் அல்லவா?,'' என்றனர். “”நீங்கள் சொல்லித் தானா அது எனக்குத் தெரிய வேண்டும்? ஒருநாள் ராமனாக உருமாறி நின்றேன். ஆனால், சீதையை வஞ்சிக்க வேண்டும் என்ற எண்ணம் என்னை விட்டு நீங்கி விட்டது. மாற்றான் மனைவியைத் தாயாக வணங்க வேண்டும் என்ற சிந்தனை உண்டானது. நான் என்ன செய்யட்டும்,'' என்று வருந்தினான். ராமனின் உயர்வைச் சொல்வதற்காக சொல்லப்படும் கர்ண பரம்பரைக் கதை இது.

## தூங்காத கண்...

கங்கைக் கரையில் வாழ்ந்தவன் குகன். ராம பக்தியில் சிறந்த அவன், ராம லட்சுமணரைக் கண்டு ஓடோடி வந்தான். ராமன், அவனைத் தன் நெஞ்சோடு அணைத்து மகிழ்ந்தார். ராம லட்சுமணர், சீதை மூவருக்கும் பழங்களைத் தந்து உபசரித்தான். “காட்டிற்குச் செல்வதை விட, 14 ஆண்டுகளும் கங்கைக்கரையிலேயே இருந்து விட்டால் எங்களுக்கு மகிழ்ச்சி. உங்களுக்குத் தேவையான அனைத்தையும் நாங்கள் செய்து தருகிறோம்,'' என்றான்.

அன்று இரவில் ராமர், சீதை இருவரும் தூங்கும்போது, லட்சுமணன் மட்டும் தூங்க வில்லை. அதைக் கண்ட குகன், “ஐயனே! நீங்கள்நிம்மதியாக உறங்குங்கள். இவ்விடத்தில் விலங்கோ, திருடரோ யாரும் உங்களை அணுக முடியாது. வேண்டுமானால், நான் கூட காவலாக விழித்திருக்கிறேன்,'' என்றான். லட்சுமணன் அவனிடம், “இங்கு பயம்ஏதுமில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், ஆளப்பிறந்த சக்கர வர்த்தி திருமகனே இப்படி தரையில் தூங்கும்படி ஆகிவிட்டதே. இதைக் கண்ட கண்களுக்கு தூக்கம் எப்படி வரும்? என்ற வருத்தத்தில் தான் தூக்கம் வர வில்லை,'' என்றான்.

## ஒரே வீட்டில் பெண் எடுத்த 4 சகோதரர்கள்

சீதையின் சுயம்வரத்தில் ராமன் சிவதனுசு என்னும் வில்லை ஒடித்து தன் வீரத்தை நிலைநாட்டினார். சீதைக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது.

இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த ராமருக்கும், நிமி வம்சத்தில் பிறந்த சீதைக்கும் பெரியோர்கள் மணநாள் குறித்தனர். அப்போது ஜனகருக்கு ஒரு யோசனை உதித்தது. லட்சுமணனையும், தன் மருமகனாக்கிக் கொள்ள எண்ணினார். தன் மகள் ஊர்மிளாவை மணமுடித்துக் கொடுப்பது என முடிவு செய்து வசிஷ்டமுனிவரிடம் தெரிவித்தார். வசிஷ்டருக்கு, இன்னும் பிரமாதமான யோசனை தோன்றியது. “”ஜனகரே! தங்களின் தம்பி குசத்வஜனின் மகள்களான மாண்டவி, சுருதகீர்த்தியை பரதன், சத்ருக்கனருக்கு மணமுடித்து கொடுக்கலாம்,'' என்றார். ஜனகருக்கு அளவில்லாத மகிழ்ச்சி. மிதிலை நகரமே அலங்கரிக்கப்பட்டு ஒரே நேரத்தில் நான்கு திருமணமும் சிறப்பாக நடந்தது.

ரகுவம்சத்தில் உதித்த இவர்களின் திருமணத்தைக்காணசூரியபகவானே நேரில் வந்து விட்டார். மண்ணுலகம் மட்டுமில்லாமல் விண்ணுலகமும் போற்றும் வகையில் நான்கு திருமணங்களும் நடந்தன.

## சுற்றி வரக் கூடாத சாமி

சிவனடியார்களில் எப்போதும் தியானத்தில் ஆழ்ந்திருப்பவர் சண்டிகேஸ்வரர். சிவன் கோயிலுக்குச் சென்று, இவரை தரிசிக்காமல் திரும்பினால், கோயிலுக்கு சென்ற பலன் கிடைக்காது என்பது ஐதீகம். வலக்கையின் நடு விரல்கள் மூன்றையும் இடக்கையால் தட்டுவது போல கையை வைத்து இவரை வழிபட வேண்டும். ஆனால், சத்தம் வரக்கூடாது. சிவதியானம் கலைந்து விடும் என்பதால் இவர் சந்நிதியில் ஒலி எழுப்புவதோ, நூலைப் பிய்த்து போடுவதோ கூடாது. இவரைச் சுற்றி வந்து வழிபடவும் கூடாது. நிர்மாலயதீர்த்தம் என்னும் அபிஷேகம் விழும்





கோமுகியைத் தாண்டக் கூடாது என்பதால் இவரது சந்நிதியைச் சுற்றும் வழக்கம் இல்லை. இவர் நாயன்மார்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

## மலை தாங்கிய மாமணிகள்

கிருஷ்ணர், ஆஞ்சநேயர் இருவரும் பிறர் நலனுக்காக மலையைத் தாங்கியவர்கள். ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையைத் தாங்கி வந்து பிரம்மாஸ்திரத்தால் மயக்கமடைந்த வானரங்களைக் காத்தார். கிருஷ்ணர் கோவர்த்தனகிரியைத் தன் விரலால் தாங்கி, பெரும் மழையில் இருந்து ஆயர்பாடி மக்களைக் காத்தார். இருவரும் தர்மத்தை நிலைநாட்ட தூது சென்றனர். ராமருக்காக, ராவணனிடம் தூது சென்றார் ஆஞ்சநேயர். கிருஷ்ணரோ பாண்டவர்களுக்காக திருதராஷ்டிரனிடம் தூது சென்றார். ஆஞ்சநேயருக்கு பிடித்தது ராமநாம சங்கீர்த்தனம். கிருஷ்ணருக்குப் பிடித்தது கோவிந்தநாம சங்கீர்த்தனம்.

## மஞ்சள் குங்குமத்துடன் நீடூழி வாழ்க!

தீர்க்க சுமங்கலியாக வாழவும், சிறந்த வாழ்க்கைத் துணை அமையவும் சோமவார விரதம் அனுஷ்டிக்கலாம். ஒவ்வொரு திங்களும் இவ்விரதம் மேற்கொள்ள வேண்டும் இதை அனுஷ்டிப்பவர்கள் காலை, இரவில் பால், பழம், மதியம் மட்டும் பச்சரிசி சாதம் சாப்பிடலாம். மாலையில் சிவாலய தரிசனம் செய்ய வேண்டும். சிவனுக்கு வில்வார்ச்சனை, விளக்கேற்றுதல் ஆகிய வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். இந்த விரதம் மேற்கொண்ட வசிஷ்டர், கற்புக்கரசி அருந்ததியை மனைவியாகப் பெறும் பாக்கியம் பெற்றார். சீமந்தினி என்பவளுக்கு மாங்கல்ய தோஷம் இருந்தது. இதுபற்றி, யாக்ஞவல்கிய ரிஷியின் மனைவி மைத்ரேயியிடம் சொல்லி வருந்தினாள். மைத்ரேயி, அவளுக்கு சோமவார மகிமையை உணர்த்தினாள். சீமந்தினியும் விரதம் மேற்கொண்டு மஞ்சள் குங்குமத்துடன் நீடூழி வாழும் வரம் பெற்றாள்.

## பெண் வடிவில் விநாயகர்

பிராஹ்மி, வைஷ்ணவி போன்ற பெண் தெய்வங்களின் வரிசையில் வைநாயகி என்ற பெயர் இடம்பெற்றுள்ளதாக பிரகத் சம்ஹிதா என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயர் பெண் வடிவ விநாயகரைக் குறிப்பதாகும். சக்திகணபதி, விக்னேஷ்வரி, கணேசினி, கஜானனா, ஜங்கினி, கணேஸ்வரி ஆகிய பெயர்களும் வைநாயகிக்கு உண்டு. பவுத்த வழிபாட்டில் “கணபதி ஹிருதயா”



என்று இவளைக் குறிப்பிடுவர். மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருச்செந்தூர், பவானி, திருக்குறுங்குடி, சுசீந்திரம் கோயில் தூண்களில் இச் சிற்பம் காணப்படுகிறது. புலிக்காலுடன் கூடிய வியாக்ரபாத விநாயகியைச் சிதம்பரத்தில் தரிசிக்கலாம்.

– மூ.சக்திவேல்.
போன்: 9787576858

## ஐயப்பன் காலைச் சுற்றிய

# அங்கவஸ்திரம்

ஐயப்பன் அருள் பல அருள்பவன். புலியை வாகனமாகக் கொண்டவன். தவக் கோலத்தில் சபரிமலையில் அமர்ந்து அருள் பாலித்துவரும் அருட்கடல். மகிஷி என்ற அரக்கியை வதம் செய்ய அவதரித்தவன் ஐயப்பன். ஐயப்பன் வரலாறு பற்றி கூறப்படுவதாவது: கேரளாவில் பந்தள மகாராஜா குழந்தையில்லாமல் மனம் வருந்தி வந்தார் அந்த சமயத்தில் மகிஷி என்ற அரக்கி ரிஷிகளை துன்புறுத்தி வந்தாள்.அவர்களுக்கு உதவ சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பிறந்தவர்தான் ஐயப்பன்.

விஷ்ணு மோகினியாக மாற, சிவனுக்கும் மோகினிக்கும் (விஷ்ணுவுக்கும்)ஐயப்பன் பிறந்தார். குழந்தையாக பிறந்த ஐயப்பனை மரத்திற்கு அடியில் விட்டுவிட்டு சென்று விட்டனர் ஹரியும், விஷ்ணுவும், தெய்வ செயல்கள் அனைத்திற்குமே ஒரு காரணம்உண்டல்லவா? பக்திமானான பந்தள மகாரஜாவின் பிள்ளையில்லா குறையைத் தீர்க்கவே பரந்தாமனும், பரம்பொரளும் குழந்தையை அங்கேவிட்டுச் சென்றனர். வேட்டைக்கு வந்த பந்தள மன்னன் குழந்தையின் அழுகுரல் கேட்டான்.

எங்கு குழந்தை அழுகிறது என பதைபதைத்து தேடி மரத்தடியில் ஜொலிக்கும்தேஜசுடன் குழந்தை ஐயப்பனைக் கண்டான். ஆண்டாவா! என் குழந்தையில்லா குறை தீர்க்கவே இந்த குழந்தை இங்கு இருக்கிறதா என மகிழ்ந்து அந்த குழந்தையை அரண்மனை கொண்டு சென்றான். அரசியும் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தாள்.

இருவரும் இறைவனுக்கு நன்றி செலுத்தினர். குழந்தையை கண்ட அனைவரும் சொக்கிப் போனார்கள்.

ஜோதிடர்கள் இந்தக் குழந்தை தெய்வாம்சம் பொருந்திய குழந்தை எனக் கூறினர். கழுத்தில் மணியுடன் பிறந்ததால், குழந்தைக்கு மணிகண்டன் என்றுபெயரிட்டு ன பெயரிடலாம் என்று முடிவு செய்து மணிகண்டன் என பெயரிட்டு அன்போடு பாராட்டி சீராட்டி வளர்த்து வந்தனர்.

இந்நிலையில் மகாராணிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அரசனும் அரசியும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. மணிகண்டன் வந்த நேரம் நமக்கும்குழந்தை பிறந்தது என ஆனந்தம் அடைந்தனர். ஆனால் எங்குமே நல் மனதைக் கெடுக்கும் புல்லுருவிகள் இருக்குமல்லவா? ஐயப்பன் உங்களுக்கு பிறந்த மகன் அல்ல.

ஆனால் அவனையே தலைப்பிள்ளை போல் சீராட்டி வளர்க்கிறீர்கள். அதனால் அடுத்த மன்னனாக அவன் வரவே வாய்ப்பிருக்கிறது. உங்களுக்கு பிறந்த குழந்தையிருக்க வேறுயாரோ எப்படி அரசனாவது என அரசியின் மனதில் நஞ்சைக் கலந்தனர் சிலர். தீயபோதனைகளால் அரசியும் மனம் மாறினாள். தான் வயிற்று வலியால் அவதிப்படுவதாக பொய்யுரைத்தாள்.

அரசவை வைத்தியரை புலிப்பால் குடித்தால் மட்டுமே தன் வயிற்று வலி தீரும் என கூற வைத்தாள். ஐயப்பன் அறிய மாட்டானா உண்மையை.

தாய்க்கு புலிப் பால் கொண்டு வர காடு நோக்கி புறப்பட்டான். வழியில் அரக்கி மகிஷி ஐயப்பனைத் தடுத்தாள்.வில்லெடுத்தான் வில்லாளி வீரன். வதம் செய்தான் மகிஷியை. அவன் அவதார மகிமை பூர்த்தி பெற்றது. தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.



இந்திரனே புலியாக மாற, மற்ற தேவர்கள் புலியாக புடைசூழ புலிமேல் ஏறி நாடு சென்றான் ஐயப்பன். புலிமேல் வந்த மணிகண்டனைக் கண்டு பதறிப் போனாள் அரசி. தான் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்டு புலிகளை திருப்பி அனுப்புமாறு வேண்டினாள். ஐயப்பனும் அவ்வாறே செய்து அருளினார்.

மேலும் தன் அவதார காரணம் பூர்த்தி பெற்றதால் தான் சப மலையில் தவமிருக்கப் போவதாகவும் தன்னை தரிசிக்க வேண்டுமானால் அங்குவருமாறும் கூறி சபரி மலையில் 18 படிகளுக்கு மேல் தவக் கோலத்தில் அமர்ந்தார் அருள்தரும் ஐயப்பன்.

இன்றும் நாம் ஐயப்பனை அங்கு அந்த தவக் கோலத்தில் காணலாம். ஐயப்பனின் இரு கால்களில் துண்டு கட்டியிருக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதற்கும் ஒருகாரணம் கூறப்படுகிறது.

ஐயப்பனைக் காண பந்தள மகாரஜா ஒரு மூறை வந்த போது ஐயப்பன் தன் தந்தை என்ற காரணத்தால் எழ முயன்ற போது இறைவன் தனக்கு மரியாதைசெய்ய எழுந்திருக்கக் கூடாது என்பதற்காக தன் தோளில் போட்டிருந்த பட்டு அங்கவஸ்திரத்தை ஐயப்பனை நோக்கி அவர் தூக்கி போட்டபோது அந்த அங்கவஸ்திரம் ஐயப்பன் காலைச் சுற்றிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

உற்று நோக்கினால் ஐயப்பன் அமர்ந்த கோலத்திலிருந்து சற்றே எழுந்திருப்பது போல் தோன்றும் எனக் கூறுகிறார்கள். இனி கோவில் செல்லும் முறை பற்றியும், சன்னிதானம் திறந்திருக்கும் காலம் பற்றியும் அறிவோம். மற்ற கோவில்கள் போல் சபரிமலை ஐயப்பன் கோவில் வருடம் முழுவதும் திறந்திருக் கப்பட் டிருப்பதில்லை. ஒவ்வொரு மலையாள மாதத்தின் கடைசி நாள்மாலை 5 மணிக்கு கோயில் நடை திறக்கப்பட்டு மலையாள மாதத்தின் 5வது நாளன்று நடை சார்த்தப்படும். ஆண்டு தோறும் நடைபெறும் மண்டல பூஜை, மகர ஜோதி பூஜைகள் விசேஷமானவை.

**- Anita Rajesh Pandiyan Chembur, Mumbai**



# உன் நன்மைக்காக சாரதாம்பாள வேண்டிக்கறேன்



“பாரத பூமி பழம்பெரும் பூமி, நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்” இது மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் வாக்கு. நம் பாரத பூமியில் எத்தனையோ மகான்கள் தோன்றி இருக்கிறார்கள். தோன்றிக் கொண்டும் இருக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர் ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர். காலடியில் பிறந்து பாரதம் முழுக்க மூன்று முறை யாத்திரை செய்து அனைவருக்கும் ஞான மார்க்கத்தை மிக எளிய வழியில் காட்டி, வேத நெறி தழைத்து ஓங்க பாரதத்தின் நான்கு திசைகளில் நான்கு ஆம்னாய பீடங்களை சிருங்கேரி, துவாரகா, புரி, பத்ரி போன்ற இடங்களில் நிறுவினார். அதில் இரண்டு பீடங்கள் மலைப் பிரதேசத்திலும், இரண்டு பீடங்களை கடற்கரைப் பகுதியிலும் இருக்குமாறு தேர்வு செய்தார்.

முதலில் தென்திசையில் கர்நாடக மாநிலம் சிருங்கேரியில் ஸ்ரீ சாரதாம்பாளை பிரதிர்ஷ்டை செய்து, சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தையும் நிறுவினார். முதல் பீடாதிபதியாகத் தானே பன்னிரெண்டு வருடங்கள் அருளாட்சி செய்தார். அதன் பிறகு தனது முதன்மைச் சீடரான ஸ்ரீ சுரேஸ்வராச்சார்யாரை ஸ்ரீ சாரதாபீடத்தின் பீடாதிபதியாக நியமித்தார். அதன் தொடர்ச்சியாக வித்யா சங்கரர்,



வித்யாரண்யர் போன்ற ஆசார்யர்கள் அருளாட்சி செய்து வந்தனர். அப்படி ஒரு சங்கிலித் தொடர் போன்ற “அவிச்சின்ன பரம்பரையில்” முப்பத்தி நான்காவது பீடாதிபதியாக இருந்தவர் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மகாஸ்வாமிகள்.

அவர் ஒரு ஜீவன் முக்தர். அந்த மகானை தரிசிக்க பெங்களூரில் இருந்து திரு. கைபு ராமா சாஸ்த்ரிகளும் அவரது மனைவி ஸ்ரீமதி வெங்கடலட்சுமி அம்மாளும் தங்களது மகன் ஸ்ரீனிவாசனையும் அழைத்துக் கொண்டு சிருங்கேரிக்கு வந்தனர். அதுசமயம் ஸ்ரீனிவாசனுக்கு வயது பதிமூன்று. குருநாதர் ஸ்ரீ சந்திர சேகர பாரதீ மகாஸ்வாமிகளின் உத்தரவின் பேரில் சிருங்கேரியிலேயே ஸ்ரீனிவாசனுக்கு உபநயனம் நடந்தது. அங்கிருக்கும் பாடசாலையில் சேர்ந்து வேத பாடங்களைக் கற்கத் துவங்கினார். ஒரு முறை படித்ததை அப்படியே மனத்திலிறுத்தி வைக்கும் சக்தியைப் பெற்றிருந்தார் ஸ்ரீனிவாசன். அவருக்குக் கற்பதில் இருக்கும் ஆர்வத்தை அறிந்து குருநாதர் மிகவும் மகிழ்ச்சி கொண்டார். பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும் சமயம், அதன் அதிகாரி அங்கு வேதம் கற்கும் மாணவர்களிடம்,” இங்கே உங்களுக்குச் சாப்பாடு நன்றாக இருக்கிறதா?” என்று கேட்டவுடன் ஒவ்வொரு மாணவனும் தங்கள் நாக்கின் ருசிக்கு ஏற்றவாறு பதில் சொன்னார்கள். ஸ்ரீனிவாசனோ,” இங்கே நாங்கள் சாப்பிடுவது குருவின் பிரசாதம். அது நன்றாகவே இருக்கிறது. இங்கே வேத பாடங்களை நன்றாகக் கற்றுத் தருகிறார்கள்” என்று பதில் சொன்னார். இதை அந்த அதிகாரி குருநாதர் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மகாஸ்வாமிகளிடம் சொன்ன பொழுது, குருநாதர் அந்த பாலகனான ஸ்ரீனிவாசனின் மன வைராக்கியத்தை நினைத்துப் பெருமை கொண்டு, அந்த பாலகனே தனக்கு அடுத்த பீடாதிபதி என்று உறுதி கொண்டார்.

ஸ்ரீனிவாசனுக்கு பதினான்கு வயதானவுடன் ஒரு நல்ல நாளில் (22.05.1931) ஜகத்குரு அவருக்கு சன்யாச ஆஸ்ரமத்தை அளித்து “அபிநவ வித்யா தீர்த்தர்” என்ற யோக பட்டத்தையும் கொடுத்து ஸ்ரீ சாரதா பீடத்தில் தமக்கு அடுத்த வாரிசாக நியமித்தார். அந்த பீடத்தின் வழக்கப்படி சன்யாசம் அளித்த அன்று குரு தங்கப் பல்லக்கிலும், சீடர் வெள்ளிப் பல்லக்கிலும் அமர, பக்தர்கள் அவர்களை சிருங்கேரி வீதிகளில் ஊர்வலமாக அழைத்து வருவார்கள். அன்றும் அது நடந்தது. ஆனால் அதில் ஒரு மாற்றம் செய்தார் குருநாதர். குருவும் சீடரும் பல்லக்கை நோக்கி நடந்து வரும் பொழுது குருநாதர் சீடரிடம் தங்கப் பல்லக்கைக் காட்டி,” நீங்கள் இதிலே அமருங்கள்” என்றவுடன், ஒரு சிறிதும் யோசிக்காமல் அந்தப் பல்லக்கிலே ஏறி அமர்ந்து கொண்டார் சீடர் ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்தர். குருவோ வெள்ளிப் பல்லக்கில் அமர்ந்து கொண்டார். இந்தக் காட்சியைக் கண்ட பக்தர்களுக்கு ஆச்சர்யமாக இருந்தது. இந்த உணர்வை மடத்தின் அதிகாரி ஸ்ரீகண்டசாஸ்த்ரிகள், குருவிடம்,” நீங்கள் தானே தங்கப் பல்லக்கில் அமர வேண்டும்“ என்று கேட்க,” இனிமேல் அவர்தான் ஸ்ரீமடத்தின் பீடாதிபதி. என்னைப் போலவே அவரையும் நீங்கள் எண்ண வேண்டும். எனக்கு இனி தபசுதான் முக்கியம்“ என்று கூறிவிட்டார். ஊர்வலம் முடிந்தவுடன் ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்தரிடம்,” நீங்கள் குரு சொன்னவுடன் தங்கப் பல்லக்கில் ஏறி அமர்ந்து விட்டீர்களே..அப்பொழுது உங்கள் மனநிலை எப்படி இருந்தது” என்று கேட்டார் ஸ்ரீகண்டசாஸ்த்ரிகள். “நினைப்பதற்கு என்ன இருக்கிறது. குருவின் கட்டளை. அதற்குக் கீழ்ப்படிவது தானே சீடனின் கடமை” என்று

www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

எந்தச் சலனமும் இல்லாமல் பதிலளித்தார். இப்படி பட்ட குரு, சீடர் பரம்பரைதான் நமது சனாதன தர்மத்தின் ஆணிவேர்.

தனது குருவிடம் நியாய சாஸ்திரம், வேதாந்த சாஸ்திர பாடங்களைப் பழுதறக் கற்றார். எப்பொழுதும் ஆழ்நிலை தியானத்தில் இருக்கும் நிலையில் குரு இருந்தார். அதிலே சீடனுக்கும் ஆர்வமிருந்தது. ஹடயோகப் பயிற்சியில் தேர்ந்த வரானார். தனது பதினேழாவது வயதிலேயே ஜீவன் முக்த நிலையை அடைந்தார். அதாவது பற்றற்ற நிலையில் இருந்தார்.

குருநாதர் தனக்குச் சீடரான ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்தருக்கு "ஸ்ரீ நரசிம்ம மந்திரத்தை" உபதேசம் செய்தார். உபதேசம் முடிந்தவுடன் சீடரின் தலையில் ஆசீர்வாதம் செய்யக் கையை வைத்த உடனேயே திருப்பி எடுத்து விட்டுத் தனக்குச் சீடரைப் பார்த்துத் தன்னிரு கைகளாலும் தொழுதார். சீடரின் உருவத்தைக் காணாமல் அங்கே ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியையே கண்டதாக குருவே சொன்னார்.

அப்படிப் பட்ட குருநாதர் 1954ம் வருடம் மஹாலய அமாவாசை அன்று ஜலசமாதி அடைந் தார். அதனால்16.10.1954ல் ஸ்ரீ சாரதா பீடத்தின் முப்பத்தி ஐந்தாவது பீடாதிபதியானார் ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்தர். சுமார் ஒரு வருட காலம் சிருங்கேரியில் இருந்து விட்டு, முதல் விஜய யாத்திரையாக தென்னிந்தியாவில், கேரளா மாநிலத்தில் இருக்கும் காலடிக்குச் சென்று அங்கு "சாதுர்மாசிய விரதம்" மேற்கொண்டார். அதன் பிறகு நவராத்ரி பூஜைகளையும் காலடியி லேயே முடித்து விட்டு ஒரு ஆறு வருட காலம் தென்னிந்தியா முழுவதும் விஜய யாத்திரை செய்தார். அதன் பிறகு வட இந்திய யாத்திரையும் மேற்கொண்டார். காசியில் ஸ்ரீ அண்ணாபூரணி கோவிலுக்குக் கும்பாபிஷேகமும் செய்து வைத்தார். அங்கிருந்து நேபாள தேசம் சென்று ஸ்ரீ பசுபதி நாதருக்கு மகாசிவராத்திரி அன்று பூஜையும் செய்தார். ஆதிசங்கரருக்குப் பின் நேபாள தேசம் சென்ற முதல் பீடாதிபதி இவராவார்.

ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்தார் ஒரு சிறந்த நிர்வாகி. புதுமைகளை விரும்பும் ஒரு யோகி. சிருங்கேரியில் மூங்கில் காடாக இருந்த இடத்தை யெல்லாம் விவசாய நிலங்களாக மாற்றினார். பாரதம் முழுவதும் ஸ்ரீ சாரதாம்பாளையும், ஸ்ரீ சங்கரரையும் பிரதிர்ஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடத்தி வைத்து, நிறைய சிருங்கேரி ஸ்ரீமடங்களை நிறுவினார். வேத பாடசாலைகளை அமைத்தார். அதனாலேயே அவரை "அநேகமட நிர்மாத்ரே நம:" என்று ஒரு நாமாவளியால் பூஜிக்கிறோம்.

சிருங்கேரியில் ஸ்ரீ சாரதா தன்வந்தரி பொது மருத்துவமனையைக் கட்டி அங்கிருக்கும் மக்களுக்கு அது பயன்படும்படிச் செய்தார். பெண் குழந்தைகளுக்காக பள்ளிகளைக் கட்டினார். சிருங்கேரியிலும், அதன் அருகில் இருக்கும் பகுதிகளிலும் உள்ள பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு மதிய உணவை ஒவ்வொரு நாளும் மடத்தில் இருந்தே அனுப்பிட ஏற்பாடு செய்தார். ஒரு முறை மடத்து அதிகாரி ஒருவர் ஆசார்யாளிடம்," நீங்கள் எல்லாப் பள்ளிகளுக்கும் சாப்பாடு அனுப்பறேள். அது சரி. ஆனா எதுக்கு கிருஸ்தவப் பள்ளிக்கூடங்களுக்கும் சாப்பாடு அனுப்பணும்" என்று கேட்டவுடன்," இத பாருப்பா... ஒத்தருக்குச் சாப்பாடு கொடுக்கும் போது சாதி, மதமெல்லாம் பாக்கறது மகா பாவம்" என்று பதில் தந்தாராம். அதனால் அவரை "அவ்யாஜ கருணா மூர்த்தயே நம:" என்றும் பூஜிக்கத் தோன்றுகிறது.

அவரைப் போலவே வைராக்கிய குணமுடைய "சீதாராம ஆஞ்சநேயலு" என்ற பிரும்மசாரிக்குத் தானே தர்க்க, நியாய சாஸ்திர பாடங்களைக் கற்றுக் கொடுத்து, 1974ம் வருடம் சன்யாசமும் தந்து, "ஸ்ரீ பாரதீ தீர்த்தர்" என்ற யோகப் பட்டமும் கொடுத்துத் தனக்குச் சீடராக்கினார். சீடரைப் பற்றி மிகப் பெருமையோடு," எனக்கு ஸ்ரீ சாரதாம்பாள் ஒரு நல்ல சீடரக் கொடுத்திருக்கா... அவர் வித்தையும் வினையமும் உள்ள பெரிய பண்டிதர்" என்பார். அதை அறிந்துணர வேண்டுமானால் ஸ்ரீ பாரதீ தீர்த்த மகாஸ்வாமிகள் தன் குருநாதரைப் போற்றி இயற்றிய "ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த அஷ்டோத்திர சத நாமாவளி"யைப் படித்தாலே போதும்.

பிங்கள வருடம் (13.11.1917) அவதரித்து, பிரஜாபதி வருடம் (22.05.1931) சன்யாசம் பெற்று, ஜயவருடம் (16.10.1954) ஸ்ரீ சாரதா பீடத்தின் முப்பத்தி ஐந்தாவது பீடாதிபதியாகி, உலகம் வணங்கும் ஜகத்குருவாகி, சுக்ல வருடம் (21.09.1989) தனது தேகத்தைத் துறந்து எங்கும் நிறைந்த பரம்பொருள் ஆனார்கள்.

ஏழையோ பணக்காரனோ யார் வந்து அவரிடம் தன் குறைகளைச் சொன்னாலும் கருணையோடு கேட்டு, "கவலைப் படாதேப்பா...உன் நன்மைக்காக நான் ஸ்ரீ சாரதாம்பாள வேண்டிக்கறேன்" என்று சொல்லி அவர்கள் கையில் ஒரு பழமோ, தீர்த்தமோ தருவார். அந்த மகானின் வாக்குப் பலிக்கும். நல்லதேதான் அவரது பக்தர்களுக்கு நடக்கும் என்பது சத்தியம்.

– மீ.விசுவநாதன்
போன்: 8056017653

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

## அற்புதமான மருத்துவ குறிப்புகள்

**கிராம்பு:** இரண்டு கிராம்புகளை பல் வலி உள்ள இடத்தில் வைத்து சிறிது நேரம் கடித்திருந்தால், பல்வலி இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

**உப்பு:** பல்வலி கண்டால், ஒரு கோப்பை வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு டீஸ்பூன் கல் உப்பைக் கரைத்து, லேசான சூட்டில் கொஞ்சம் கொஞ்சமாக வாயில் ஊற்றி கோப்பை முழுவதும் கொப்பளித்து துப்பிவிடவும். இவ்வாறு தினமும் செய்து வர, பல்வலி மற்றும் வீக்கம் குறையும். மேலும் உப்பு நீரினால் கிருமிகளும் அழியும்.

**பூண்டு:** ஒரு பல் பூண்டை நசுக்கி வலி உள்ள இடத்தில் வைக்க பல்வலி படிப்படியாக குறையும். பூண்டில் அல்லிசின் என்ற நோயை எதிர்க்கும் ரசாயனப் பொருள் உள்ளதால் இந்த நல்ல பலன் கிடைக்கும்.

**கோதுமைப்புல் சாறு:** கோதுமைப்புல் சாற்றினை அருந்தி வர பல் வலி விலகும். ஒரு சிறிய தொட்டியில் கோதுமைகளை ஆங்காங்கே பதித்து தண்ணீர் விட்டு வர, அதிலிருந்து புல் முளைக்கும். அதனை பறித்து சுத்தப்படுத்தி மைய அரைத்து சாறெடுத்து அருந்தலாம்.

**வெங்காயம்:** பச்சை வெங்காயத்தை கடித்து மென்று சாற்றை விழுங்க பல் வலி குறையும். பச்சை வெங்காயத்திலுள்ள காரத்தன்மையானது பல்லிலுள்ள கிருமிகளை அழிப்பது மட்டுமல்லாமல் பல் சொத்தையையும் தடுக்கும்.

**கொய்யாப்பழ இலை:** வீட்டில் கொய்யா மரம் இருந் தால் இரண்டு இலைகளைப் பறித்து வாயில் போட்டு மென்று, அதன் சாறை வாயில் சில நிமிடங்கள் இருக்கும்படி செய்யலாம்.

**கால்சியம் உணவுகள்:** பல் வலி உள்ளவர்கள் அதிக சூடான அல்லது அதிக குளிர்ச்சி யான உணவை தவிர்க்கவும். கால்சியம் சத்துக்கள் நிரம்பிய உணவு வகைகளை உண்ணவும். நெல்லிக்காய், பால், வெண்ணை, எலுமிச்சை போன்றவற்றை முறையாக உண்டு வர பற்கள் பலமடையும்.

**நல்லெண்ணெய் :** காலையில் எழுந்தவுடன் நல்லெண்ணெயை சிறிது வாயிலிட்டு 15 நிமிடங்கள் கொப்பளிக்க வெள்ளை நிறத்தில் நுரைத்துக் கொண்டு வரும். அதனை துப்பி விடவும். இவ்வாறு சில நாட்கள் செய்ய வாயிலுள்ள பிரச்சனைகள் அனைத்தும் விலகும்.

**இஞ்சி சாறு :** இஞ்சிச்சாற்றை லேசாக சூடுபடுத்தி வாய் கொப்பளித்து வர பல்வலி குறையும். சுக்கு பொடியை வலியுள்ள இடத்தில் வைத்து அழுத்தி விடவும். சுக்கு வீக்கதிலுள்ள கேட்ட நீரை உறிஞ்சி, பல் வலியை போக்கும்.

**சூடம்:** சூடத்தை பல் வலி இருந்த இடத்தில் வைத்து கடித்தால், சிறிது நேரத்தில் பல் வலியானது நின்றுவிடும்.

பாகம் 5

# “ஆ(ம)ஹா பாரதம்”

ஆயோததௌம்யரின் 3வது சீடர் வேதன். குருவானவர் வேதனிடம் தன் வீட்டிலேயே இருந்து சேவை செய்யும்படி சொல்ல அதையேற்று வேதனும் பல காலம் பலவித கஷ்டங்களை சகித்தபடி சேவை செய்து வந்ததால் குரு மகிழ்ந்து உனக்கு சகல வேத, சாஸ்த்திரங்களும் தானே உன்னைச் சேரும் நீ பெரும்புகழ் அடைவாய் என அருள் பாலித்து அனுப்பி வைத்தார்.

வேதன் கிருஹஸ்தரானார். இந்த வேதனுக்கு 3 சீடர்கள். அவர்களில் ஒருவர் உத்தங்கர். குரு வேதன் ஒரு முறை வெளியே செல்ல வேண்டியிருந்ததால் தன் வீட்டு கடமைகளை உத்தங்கரிடம் ஒப்படைத்து விட்டு சென்றார்.

குருவின் கட்டளைப்படி உத்தங்கர் அவரது கடமைகளை செம்மையாய் செய்து வந்தார். ஒரு முறை வீட்டில் உள்ள பெண்கள் அவரிடம் வந்து “உனது குருவின் மனைவிக்கு இது ருது காலம். குரு வெளிதேசம் சென்றுள்ளதால் இவரது ருது காலம் வீணாகிப் போகிறது. அது பலனின்றிப் போகாதிருக்க நீ ஏதேனும் செய்து அவரது கவலையைப் போக்கு” என்றனர்.

உத்தங்கன் அதற்கு “பெண்களின் பேச்சைக் கேட்டு உலகம் நிந்திக்கும்படியான செயலை ஒரு போதும் செய்ய மாட்டேன். குரு கட்டளையிட்ட சேவையை மட்டுமே செய்வேன்” என மறுப்பு தெரிவித்து விட்டார்.

வீடு திரும்பிய வேதன் நடந்தவைகளை கேட்டறிந்து மகிழ்ந்து உத்தங்கரிடம் வந்து “உன் விருப்பம் போல் வாழ்வு அமையும். நீ விரும்புபவை அனைத்தும் உன்னை வந்து சேரும். நீ வீடு செல்ல அனுமதிக்கிறேன் சென்று வா” என்று கூறினார்.

அதற்கு உத்தங்கர் “குருவே! நான் உங்களுக்குரிய குருதட்சிணை கொடுக்காமல் எப்படிப் போவது? தர்மமற்றவைகளை கற்பித்தவன். உபதேசிப்பவன் மரணமடைவான் (அ) துவேஷமடைவான். அதுபோல் தர்மமற்ற முறையில் கேள்வி (அ) கற்பவன் எனும் குருசீடர் இருவருள்ளும் இதுவே நடைபெறும் என்று பெரியோர் கூறியுள்ளனர்.

உங்கள் குருதட்சினையை கொடுக்காமல் நான் செல்ல முடியாது” என்றதும் வேதன் “நீ இதை உன்குரு பத்னியிடமே கேட்டுக் கொள்” என்று சொல்லிவிட்டார்.

உத்தங்கர் குருபத்னியிடம் சென்று கேட்க குருபத்தினி “மகனே! பௌஷ்ய மன்னரின் மனைவி அணிந்திருக்கும் இரண்டு குண்டலங்களை வாங்கி வா. அதை அணிந்துக் கொண்டு நான் பிராமண போஜனம் செய்வேன். அதனால் நீ நன்மைப் பெறுவாய்” என்று சொல்ல உத்தங்கர் காலம் கடத்தாமல் அதைப் பெற்று வர புறப்பட்டு விட்டார்.

பௌஷ்ய மன்னரிடம் சென்று விஷயத்தை சொல்ல; அவர் “அந்தப்புரத்திலுள்ள ராணியிடமிருந்து பெற்றுக் கொள்” என்று சொல்லிவிட்டார். அந்தப்புரத்தில் ராணி தென்படாததால் மன்னரிடமே காரணம் கேட்டார்.

“என் மனைவி பதிவிரதை ஆதலால் உம்மை சுத்தப்படுத்திக் கொண்டு செல்” என்று மன்னர் தெரிவித்தார். உத்தங்கர் பயணக் களைப்பு நீங்கவும் தான்னை சுத்தப்படுத்திக் கொண்டு மீண்டும் சென்று பார்க்க ராணி தென்பட்டாள். விவரமனைத்தையும் அறிந்த ராணி உத்தங்கரின குருசேவையை யெண்ணி பெருமிதம் கொண்டு “குழந்தாய்! இதை அபகரிக்க நாகராஜன் தக்ஷகன் காத்திருக்கிறான் எனவே ஜாக்கிரதை” என்று சொல்லி குண்டலங்களை தந்து விட்டாள்.

அதைப் பெற்றுக் கொண்டு புறப்படும் நேரம் மன்னர் உத்தங்கரிடம் “பிராமணரே! எப்பொழுதோ ஒரு முறை தான் தங்களைப் போன்ற நல்ல தகுதியுள்ள பிராமணரை காண முடிகிறது. நான் அதை தவற விட விரும்பவில்லை. எனவே தயவு செய்து இங்கு எமது விருந்தினை ஏற்றுக் கொண்டு எமக்கு ஆசி வழங்கி செல்லும்” என்றார்.





உத்தங்கரும் சம்மதிக்க விருந்தும் இருவரால் உபசரிக்கப்பட்டது. உணவு ஆறி இருந்ததோடு அதில் தலைமுடியும் இருந்ததைக் கண்ட உத்தங்கர் மிகுந்த கோபம் கொண்டார்.

கோபத்தின் விளைவு என்ன?

அதற்கு முன் மேலே கண்டவைகளை சிறிதுப் பார்ப்போம்.

ஒரு குருவானவர் ஒரு சீடனை சரியான முறையில் பரிசோதிக்காமல் தனக்கு பல காலம் சேவை செய்தான் என்பதற்காக உடனே அவனது தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு “அனைத்தும் நீ கைவரப் பெறுவாய் சென்று வா” என்று அவனுக்கு அருள் பாலித்து விட்டால் அவனால் இந்த சமுதாயத்திற்கு என்னென்ன தீங்கு நேருமோ?

தகுதியுள்ள குருவிடம் பாடம் படிக்க வரும் ஒருவனை சீடனாக ஏற்கும் முன் அவனுக்கு பல விதமான சோதனைகளை வைத்து, அதில் சாதனைகளை செய்யும் ஒருவனையே சீடனாக அங்கீகரித்து வெளியே விட வேண்டும்.

சீடனும் மேன்மையான ஒரு குரு தனக்கு வாய்க்கும் போது நல்ல முறையில் அதை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். குருதட்சிணை என்பதும் வெற்றுப் பொன். பொருளாக இல்லாமல் அதுவும் தன் திறமையை, வெளிப்படுத்தும் சாதனைப் பொருளாகவே இருக்க வேண்டும்.

குரு சீடர் இருவரும் சமுதாயத்தின் நன்மைத் தீமைகளை ஆராய்ந்துப் பார்க்கும் வல்லமைப் பெற்றவர்களாக மட்டும் இல்லாமல் அதில் எதைக் களைந்து எதை எவ்விதத்தில் வளர்க்க வேண்டும் எனும் தீர்க்க தரிசனம் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

இதையெல்லாம் இப்போது பேசிப் பயன் என்ன என்கிறீர்களா? வெட்டியாக பேசுவதை விட இப்படியாவது பேசித்திரியலாமே என்பதால் தான். உத்தங்கரின் கோபத்தோடு

அடுத்த இதழில்....

-Thali, Ph:9600999279


ஆன்மிகமலர் மெயில் புக்

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து பிரதிகளையும்
படித்து மகிழ...
www.aanmeegamalar.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து
மொழிகளிலும்
செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.